பிரதம தபாற்கந்தோரில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது.

# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 7 | இதழ் 15 | ஏப்ரல் 2 1969 | பக்கங்கள் 8 | விலை சதம் 10

**மா சே - துங் சிந்தனை**

ஒரு மகத்தான புரட்சி இயக்கத்துக்கு வழிகாட்டும் எந்த ஒரு அரசியல் கட்சியும் புரட்சிகரத் தத்துவம், வரலாற்று அறிவு, நடைமுறை இயக்கம் பற்றிய ஒரு ஆழ்ந்த விளக்கம் ஆகியவற்றைப் பெற்றிராவிட்டால், அதை வெற்றிக்கு வழி நடத்துவது சாத்தியமாகாது.

★

# மக்களை வாட்டும் வரட்சிக்கு காரணமென்ன ?

**இன்று சாதாரணமாக மக்கள் கூடுமிடமெல்லாம் அவாகள் பேசிக்கொள்வது முக்கியமாக நாட்டில் நிலவுகின்ற கடும் வரட்சியும், அதனுல் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றியுமேயாகும். வரட்சியினுல் ஏற்பட்ட மின்சாரவெட்டு, மின்சாரத்தைப் பாவிப்பவர்களுக்கு மட்டுமல்லாது பல வசதியின்மைகளை ஏற்படுத்தியுள்ளது. அது மட்டுமல்ல கைத்தொழில் துறையில் குழப்பநிலையும் இதனுல் ஏற்பட்டுள்ளது.**

இன்று, அமுலிலுள்ள மின்சாரவெட்டுக்கு உண்மையில் காரணம் யாது? காஸல்ரீ அணைக்கட்டுக்கு தண்ணீர் கிடைக்கும் பிரதேசங்களில் மழை பெய்யாத காரணத்தால் தண்ணீர் நிலைமை அபாய அளவிற்குக் கீழே இறங்கிவிட்ட காரணத்தினுல்தான் மின்சாரவெட்டு அமுலிலுள்ளது எனக் கூறப்படுகின்றது.

ஒரு முக்கிய பிரச்சினை தற்போது எழுகின்றது. வருடம் பூராவும் மழை பொழிகின்ற மலைநாட்டுப் பகுதிகளில் இன்று மழை பெய்யாமல் விடுவதற்கு மூல காரணம் என்ன? இதுவே பதில் பெற்றுக் கொள்ள வேண்டிய முக்கிய கேள்வி.

காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சு தெரியாத்தனமாக உண்மையைக் கக்கி விட்டது. செயற்கையாகமழைபெய்விக்க வேண்டுமென்ற ஆலோசனையை முன்வைத்ததன் மூலம் அவர்கள் உண்மையைக் கூறி விட்டார்கள். இலங்கைக்கு மேலாக மழை முகில்களைத் திரட்டுவதற்கு ஏதோ சில இராசாயனப் பொருட்களை (அவற்றின் பெயர்கள் எமக்கு அவசியமில்லை) மேக மண்டலத்தில் தூவுவதற்கு இவர்கள் உத்தேசித்துள்ளார்களாம். மழை முகில்கள் தற்போது இலங்கைக்கு அப்பால் உள்ளனவாம்.

இம் மழை முகில்கள் யாவும் இலங்கைக்கு அப்பால் மிதப்பதற்கு காரணம் யாது? இது ஒரு மிக முக்கியமான கேள்வி. மழை முகில்களை இழுத்து அவற்றை மழை பொழியச் செய்யக் கூடிய நமது மலைகளில் நீண்டு வளர்ந்த பெரு மரங்கள் யாவும் தற்போது மலை உச்சிகளில் இல்லை. இதனுலேயே, மழை முகில்கள் யாவும் சிதறிச் செல்கின்றன. இலங்கையை பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகள் வெற்றிகொண்ட பின்னர் மலைப்பிரதேசங்களில் தேயிலைச் செடிகள் நடுகைக்காக மலைகளிலிருந்த அடர்ந்த காடுகளையெல்லாம் அழித்தனர்.

மலை உச்சிகளிலுள்ள காட்டு மரங்கள் இயற்கையின் முக்கியமான கடமையொன்றை நிறைவேற்றுகின்றன வென்பதை சாதாரண மாணவர்கள் கூட அறிவார்கள். மலை முகடுகளிலுள்ள மரங்கள் மழை முகில்களை இழுத்து அவற்றை மழையாகப் பொழியச் செய்வதற்கு உதவுகின்றன. அது மட்டுமல்ல, அம் மரங்களின் வைரம்பாய்ந்த வேர்கள் பெய்யும் மழைநீரை கீழே அடித்துச் செல்லப்படாமல் தடுக்கின்றன. ஆறுகளுக்கு தண்ணீர் அளிக்கும் நீர்ச் சுனைகள் உற்பத்தியாவதற்கும் இவை உதவுகின்றன. பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் மலை உச்சிகளிலுள்ள காடுகளை வெட்டி வீழ்த்தி அவ்விடங்களில் தேயிலைச் செடிகளை நாட்டியது அவர்களுடைய மிருகத்தனமான, காட்டுமிராண்டித்தனமான செயல்களில் ஒன்றுகும். ஒரே அடியில் நம்நாட்டின் மழைச் சக்தியை குறைத்ததோடல்லாமல் இன்று மண்ணரிப்பு என்று கூறப்படுகின்ற பிரச்சினை உருவாவதற்கும் வழி வகுத்தார்கள். மலை உச்சிகளில் அடர்ந்த காடுகள் இல்லாமையால் பெய்கின்ற மழைநீர் யாவும் ஒரேயடியாக கீழே அடித்துச் செல்லப்படுவதோடல்லாமல், பசளையூட்டுவதற்காக தேயிலைச் செடிகளைச் சுற்றியுள்ள இடங்களைக் கிளறி மண்ணை இளகச் செய்வதினுல் வளமான மண் அரித்துச் செல்லப்படுகின்றது.

இதனுல் இரட்டை நாசம் ஏற்படுகின்றது. ஒரு கட்டத்தில் வரட்சி ஏற்படுகின்றது. மறு கட்டத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்றது. மாவனெல்லை, கேகாலை, இரத்தினபுரி போன்ற நகரங்களில் குடிப்பதற்குப் போதிய தண்ணீர் இல்லை. இன்னும் இரண்டொரு மாதங்களில் இரத்தினபுரி நகரம் வெள்ளப் பெருக்கில் அமிழும் என்று கூறுவதற்கு யாரும் சோதிடம் பார்க்க வேண்டியதில்லை. மலை உச்சியிலுள்ள மண் கீழே அடித்துச் செல்லப்பட்டு வந்துள்ளமையால் ஆறுகள் மண்ணுல் நிரம்பி மேடாகியுள்ளன. இதனுல், பெய்யும் மழை நீரை இவ் ஆறுகளால் கொள்ள முடியவில்லை, இதனுலேயே வெள்ளப் பெருக்குகள் ஏற்படுகின்றன. பயன்படக் கூடிய நீர் வீணுகின்றது.

இதற்கு மாற்று உண்டா ஆம் உண்டு. பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் செய்தவற்றை நாம் மாற்றியமைக்க வேண்டும். அவர்கள் காடுகளை அழித்து தேயிலைச் செடிகளை நாட்டினர். மலை உச்சியிலுள்ள தேயிலைச் செடிகளை வேருடன் களைந்து விட்டு மீண்டும் அடர்ந்த காடுகள் வளர்க்கும் ஒரு திட்டமிட்ட நடவடிக்கையை நாம் மேற்கொள்ள வேண்டும். இதனைச் செய்வதற்கு அதிக நாள் எடுக்கலாம். ஆனுல், இது செய்யப்பட்டேயாக வேண்டும். ஏனைய நாடுகளில் இதனைச் செய்து முடித்துள்ளனர்.

இதன் மூலமே மழையில்லாப் பிரச்சனையை, மண்ணை

8-ம் பக்கம் பார்க்க

## ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும்

# லெனினது நாடும்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அண்மையில் வெளியிட்டுள்ள வழமைக்கு மாருன ஹாஸ்யம் நிறைந்த ஒரு அறிக்கையில் பிரதம மந்திரியை பல விசயங்களில் குடைந்தெடுத்துள்ளது.

ஆனுல், ஓரிடத்தில் அவர்கள் பாரதூரமான தவறிழைத்து விட்டார்கள்.

ஒரு காலத்தில் மார்க்ஸிசத்திலிருந்து நாட்டைக் காக்குமாறு மக்களுக்கு அறைகூவல்விட்ட கட்சியின் தலைவரான இன்றைய பிரதமர் இன்று லெனினது நாட்டுக்குச் செல்ல விரும்புவதையிட்டு அவரைத் தாக்கியுள்ளார்கள்.

ஆனுல், இதில் இரு முரண்பாடுகள் உள்ளன. முதலாவதாக, இன்று சோவியத் யூனியன் லெனினது நாடல்ல. அவர் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் காலமாகிவிட்டார். அவரது வழிவந்த ஸ்டாலின் காலமாகி பதினுறு வருடங்கள் ஆகின்றன. லெனினும், ஸ்டாலினும் எதற்காகப் போராடினுர்களோ அவற்றையெல்லாம் காட்டிக் கொடுத்த ஒரு திரிபுவாத கும்பலினுல் இன்று சோவியத் யூனியன் ஆளப்படுகிறது.

இரண்டாவதாக, மார்க்ஸிசத்திற்கு எதிராக புனித யுத்தம் புரிந்த ஒருவரை தமது நாட்டிற்கு வருமாறு வரவழைத்தது சோவியத்து நவீன திரிபுவாத ஆளும் கும்பலே.

மார்க்ஸிசத்தைப் பற்றிய தமது கருத்தை பிரதம மந்திரி மாற்றிக் கொள்ளவில்லை. அவர் இன்றும் மார்க்ஸிசத்தின் பரம வைரியாகவேயுள்ளார். பதிலாக சோவியத் திரிபுவாதிகள் தான் மார்க்ஸிசத்திற்கு துரோகம் செய்து விட்டார்கள். அதனுல் தான் மார்க்ஸிசத்தின் எதிரியான டட்லி சேனுநாயக்காவுடனும், ஆயிரக்கணக்கான இந்தோனேஷிய கம்யூனிஸ்டுகளையும், முற்போக்குவாதிகளையும் படுகொலை செய்த பாஸிஸ கொலைகாரன் ஆதம் மாலிக்குடனும் கொஞ்சிக் குலாவுவதற்கு அவர்களுக்கு எவ்வித கஷ்டமுமில்லை.

பிரதம மந்திரியின் ருஷ்ய விஜயம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்தியுள்ளது உண்மை தான். ஆனுல், உண்மைக்கு முகம் கொடுக்கத் தயக்கமேன். உண்மையில் சோவியத் யூனியன் ஒரு சோஷலிஸ நாடல்ல என்பதை ஏற்றுக்கொள்ளத் தயங்குவதேன்.

# இந்திய திரைப்பட முதலாளிகளின் இலங்கைக் கைக் கூலிகள்

இந்தியத் திரைப்பட இறக்குமதிக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதையும், இப்போது ஒவ்வொரு படத்திலும் மூன்று பிரதிகள் மட்டுமே எடுக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் புதிய கட்டுப்பாட்டையும் எதிர்த்து தமிழ் மக்களின் மத்தியில் உள்ள பிற்போக்குவாதிகள் கூச்சல் கிளப்பியுள்ளார்கள். தமிழ் மக்களுக்கு ஏதோ பெரிய அநியாயம் நடந்துவிட்டது எனவும், அவர்களுடைய கலாச்சார வளர்ச்சிக்கும் பொழுது போக்குக்கும் பெருமளவு தீங்கு நேரிட்டுவிட்டது எனவும் ஓலமிடுகிறார்கள்.

ஆனால் உண்மை என்ன?

இந்தியத் திரைப்படக் கட்டுப்பாட்டால் தமிழ் மக்களுக்கு அநியாயம் நடந்து விட்டதா? கலாச்சார வளர்ச்சிக்கும் பொழுது போக்குக்கும் குந்தகம் ஏற்பட்டுவிட்டதா என்றால் உண்மையில் இல்லை.

கடந்த காலங்களில் இந்தியத் திரைப்படங்கள் எந்த விதத் தட்டுத் தடங்கலுமின்றி இலங்கைக்கு இறக்குமதியாயின. இதன் மூலம் இந்தியப் பட முதலாளிகள் இந்நாட்டின் பணத்தைக் கோடிக் கணக்கில் சுரண்டிக் கொண்டு போனார்கள். இலங்கையிலுள்ள அவர்களின் திரைப்பட ஏஜெண்டு முதலைகளும் தியேட்டர் முதலாளிப் பெருச்சாளிகளும் திரைப்பட விநியோகத்திலும் தியேட்டர் வியாபாரத்திலும் ஏகபோகம் செலுத்தி கொள்ளை கொள்ளையாக லாபமடித்தார்கள்.

அப்படித்தான் இந்தியத் திரைப்படங்கள் இந்நாட்டின் பணத்தைப் பெருமளவில் வாரிச் சுருட்டிக் கொண்டு போனாலும் இந் நாட்டு மக்களுக்கு நன்மை ஏதும் அளித்ததா என்றால் இல்லை. மாறாக, அவர்களைச் சீரழித்ததுதான் மிச்சம். யதார்த்தத்திற்குப் புறம்பான வறட்டுக் கற்பனைகளையும், காமக் கூத்துக்களையும், முதலாளித்துவ - நிலப் பிரபுத்துவ பிற்போக்குக் கருத்துக்களையும் தான் பிரச்சாரம் செய்தன. மக்களை அந்த வழியிலேயே சிந்திக்கவும், உணர்ச்சிப்படவும் செய்தன.

நாளடைவில் இந் நாட்டில் முதலாளித்துவ அரசாங்கங்களின் கொள்கையினால் ஏற்பட்ட அந்நியச் செலாவணி தட்டுப்பாட்டாலும் சிங்களப் படத் தயாரிப்பாளர்களின் ஆட்சேபனைக்குரலுக்குச் சற்றுச் செவி சாய்க்க வேண்டிய நிர்ப்பந்தத்தினாலும் இந்தியப் பட இறக்குமதிக்கு சிறுகச் சிறுக கட்டுப்பாட்டை அரசாங்கம் விதிக்க வேண்டியதாயிற்று. அப்படி இருந்தும் இப்போதுள்ள கட்டுப்பாட்டிலும் கூடவருடமொன்றுக்கு 45 லட்சம் ரூபாவை இந்தியப் படங்கள் கொண்டு போகின்றன.

ஆனாலும், கட்டுப்பாட்டு நிலையிலும் இப்போது வரும் படங்களாலும் கூட, உள்ளூர்த் திரைப்படத் தொழில் பாதிக்கப்படுகின்றது என்று குறிப்பாக சிங்கள படத்தயாரிப்பாளர்களும் கலைஞர்களும் குரல் முழக்கத் தொடங்கியுள்ளதாலும், அவர்களின் ஆதரவை எதிர்வரும் தேர்தலில் பெறுவதற்காகவுமே யு. என். பி. அரசாங்கம் ஒரு படத்திற்கு 3 பிரதிகள் மட்டுமே என்ற புதிய கட்டுப்பாட்டை விதித்துள்ளது.

### இலங்கைப் படத்திற்கு இந்தியாவில் அனுமதியில்லை

இலங்கையில் சினிமாப் படச் சரித்திரம் 1947 லிருந்து ஆரம்பித்தாலும் அனைத்தும் சிங்களப் படங்களாகவே எடுக்கப் படுகின்றன. இன்று சிங்கள படத் தொழிலில் பல பத்துலட்சங்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளன. தமிழர் பலர் தமிழ்ப் படம் எடுக்கத் துணிவில்லாது பல லட்சம் ரூபாய்களை சிங்களப் படத்தில் செலுத்தியுள்ளார்கள். இந்தக் குறுகிய கால வளர்ச்சியில் தரமான படங்கள் சில வெளிவந்துள்ளதோடு, சர்வ தேசப் பரிசையும் பெற்றுள்ளன. குறிப்பாக இந்தியாவில் நடைபெற்ற சர்வதேசத் திரைப்படப் போட்டியில் முதல் பரிசான தங்கமெடலைப் பெற்ற ''கம்பெரலிய'' என்ற சிங்களப் படத்தை இந்திய விநியோகஸ்தர் ஒருவர் விலைக்கு வாங்கி இந்தியாவில் திரையிட இந்திய அரசாங்கத்திடம் அனுமதி கோரியபோது, வெளிநாட்டுச் செலாவணி அளிக்க இந்திய அரசாங்கம் மறுத்து விட்டது. இலங்கைக்கு புகழ் தந்த ஒரு படத்தைத்தானும் இந்தியாவில் திரையிட அனுமதியாமல் இந்தியப் படங்கள் நமது நாட்டைச் சந்தையாகப் பாவிக்கின்றன.

1966, ஆகஸ்ட் 'தொழிலாளி' இதழில் வெளிவந்தது.

எது எப்படி இருந்த போதிலும் இந்தியத் திரைப்படங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள இக்கட்டுப்பாடுகளால் தமிழ் மக்களுக்கு எவ்வித தீங்கும் ஏற்படப் போவதில்லை. ஏனெனில் மேலே நாம் சுட்டிக்காட்டிய படி, இந்தப் படங்கள் காமக் களஞ்சியங்களாகவும், இளம் வயதினரை கெடுக்கும் நஞ்சாகவும், பிற்போக்குக் கருத்துக்களைப் பரப்பும் பிரச்சார சாதனங்களாகவும், மூடத்தனத்திலும், உளுத்துப்போன கொள்கைகளிலும் மக்களைத்

## அலங்கரித்த இந்திய 'சவப் பெட்டி' களுக்காக கண்ணீர் வடிக்கும் தேசத் துரோகிகள்

தாலாட்டி உறங்க வைப்பனவாகவுமே உள்ளன. இந்தப் படங்கள் தமிழ் மக்கள் கடைபிடிக்க வேண்டிய சரியான கலாச்சார நெறியையோ, முற்போக்கான கருத்துக்களையோ, அல்லது தமிழ் நாட்டு மக்களின் யதார்த்த வாழ்வையோ பிரதிபலிக்கவில்லை. இந்த நிலையில் இப்படங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு இலங்கைத் தமிழர்களுக்கு தீங்கு விளைவிக்கும் என கூப்பாடு போடுவது எவ்வாறு பொருந்தும்?

ஆனால் தமிழர் மத்தியில் உள்ள பிற்போக்கு வாதிகள் இப்படிக் கூச்சல் போடக் காரணம் என்ன? இவர்கள் இந்

**நம்மைச் சுற்றி**

**நவம்**

நாட்டிலுள்ள, இந்தியப் படங்களின் ஏஜெண்டு முதலைகளின் நலன்களை - அவர்களின் லாபத்தையும், சுரண்டலையும் கட்டிக் காக்கவே.

இந் நாட்டில் இந்திய படங்களின் ஏஜெண்டுகளாக ஏகபோகம் செலுத்தும் நிறுவனங்களான சிலோன் தியேட்டர்ஸ் சினிமாஸ் லிமிடெட் போன்றவை தமிழ் முதலாளிகளின் கையிலேயே தான் உள்ளன. இப் பெருச்சாளிகளின் குரலாகவே பிற் போக்குவாதிகள் குறிப்பாக தமிழரசுத் தம்பிரான்களும் அவர்களில் ஒருவரான அறிக்கை வீரர் - அரசியல் அலி ரத்தினமும் ஒப்பாரி வைக்கின்றனர். இதன் மூலம், இத் திரைப்பட ஏஜெண்டுகளுக்கு மட்டுமல்ல, இந்தியப் பட முதலாளிகளும் பந்தங்காரர்களாக இருக்கின்றனர்.

இந் நாட்டிலுள்ள தமிழ்ப் பட ஏஜெண்டுகளான தியேட்டர் முதலாளிகள் லேசுபட்டவர்களல்ல. பலவகையில் சக்தி படைத்தவர்கள். ஒரு தடவை இந்த முதலாளிகளில் ஒருவருக்கும் யாழ்ப்பாண மேயர் ஒருவருக்கும் நடந்த மோதலில் அந்த மேயரின் பதவிக்கே சீட்டுக் கிழித்து விட்டார் அந்தத் தியேட்டர் முதலாளி. அந்த அளவுக்கு அரசியலில் கூட தாம் நினைத்ததைச் சாதிக்கும் வல்லமை படைத்தவர்களின் ஆதரவும் உதவியும் தமக்கு எப்போதும் இருக்க வேண்டும் என்பது தமிழ் பிற்போக்கு அரசியல் வாதிகளின் நாட்டம் ஆகவே தமது நலன்களையெல்லாம் தமிழ் மக்களின் பெயரைச் சொல்லி ஈட்டிக் கொள்ளும், அரசியல் கழிசடைகளான நவரத்தினங்களும், அவர்களது கட்சி எம்.பி. களும், இதர பிற்போக்குவாதிகளும் இந்தப்பட விஷயத்திலும் தமிழ் மக்களின் பேரைச் சொல்லி, அதை முன் வைத்து சுயலாபம் தேடப் பார்க்கிறார்கள்.

இந்தப்பட முதலாளிகளுக்கு தமிழ் மக்களின் கலாச்சாரத்தில் அக்கறை ஏதுமில்லை. இவர்களில் சிலருக்கு இலங்கையில் சினிமா ஸ்டுடியோக்கள் உள்ளன. ஆனால் இவர்கள் அங்கே சிங்களப் படங்களைத் தயாரிக்கிறார்களே தவிர, தமிழ் படங்களைத் தயாரிப்பதில்லை. இந் நாட்டுத் தமிழ் மக்களின் வாழ்க்கையையும் அவர்களின் ஆர்வ அபிலாஷைகளையும் மையமாக வைத்து, படம் தயாரிப்பதில்லை. அதன் மூலம் இந் நாட்டுக் கலைஞருக்கு ஊக்கம் அளிக்கும் நோக்கமும் இல்லை. இலங்கையில் தமிழ்ப் படம் தயாரிப்பதிலும் பார்க்க, இந்தியப் படங்களை இறக்குமதி செய்து காட்டுவதில் கொள்ளை இலாபம் திரட்டலாம் என்பது தான் இவர்களின் அபிப்பிராயம். ஆக, இவர்களுக்கு லாபம் ஒன்றே குறியே தவிர, தமிழ் மக்களின் கலாச்சார வளர்ச்சி பற்றியோ, பொழுதுபோக்கைப் பற்றியோ அக்கறையில்லை. ஆர்வ மிகுதியால் தன்னிச்சையாக ஓரிரு தமிழ்ப் படங்கள் இங்கு தயாரிக்கப்பட்ட போது, அப் படங்களுக்கு தியேட்டர் கூடக் கொடுக்காது நசுக்கினர் இந்த கேடுகெட்ட முதலாளிகள். அப்போதெல்லாம் இப்போது கூச்சல் போடுவோர் எங்கிருந்தனரோ தெரியவில்லை. இதிலிருந்து இவர்கள் இந்திய முதலாளித்துவத்தின் கைக்கூலிகள் என இந்நாட்டு மக்கள் எண்ணுவது சரியானதே.

சிங்களப் படத் தயாரிப்பாளர்களும், சிங்களக் கலைஞர்களும் இந்தியத் திரைப் படங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததை வெறுமனே வகுப்புவாதக் கண்ணோட்டத்தோடு பார்க்கின்றனர், கூச்சல் போடுவோர். ஆனால், அண்மையில் கண்டியில் நடந்த சிங்கள கலைஞர்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போது, ''இலங்கையிலே ஏன் தமிழ் படம் தயாரிக்கப்பட முடியாது?'' என்ற சுலோகம் தாங்கிய அட்டையையும் கொண்டு சென்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. அவர்கள் இந்தியப் படங்களைத்தான் எதிர்க்கின்றனரே தவிர தமிழ்ப் படங்களை அல்ல. இலங்கையில் தமிழ்ப் படங்கள் தயாரிப்பதை அவர்கள் எதிர்க்கவில்லை.

இதே சமயத்தில் இங்கே இன்னொன்றையும் குறிப்பிட வேண்டியுள்ளது. இலங்கையில்கூட தயாரிக்கப்படும் பெரும்பாலான சிங்களப் படங்கள் மேற்கத்திய-இந்தியப் படங்களைக் காப்பியடித்தும், முதலாளித்துவ, நிலப் பிரபுத்துவ கருத்துக்களையும் கலாச்சாரத்தையும் தான் பரப்புகின்றன. எம்மைப் பொறுத்த வரை இந்த வகையிலேயே இலங்கைத் திரைப் படத் தொழில் வளர வேண்டும்-அதற்காக இந்தியப் படங்களின் ஆக்கிரமிப்புக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றால் அதனை ஆதரிக்கத் தயாரில்லை. நாம் கூறுவது இதுதான்: இந்தியப் படங்களையோ, அல்லது ஆங்கிலப் படங்களையோ நாம் எதிர்ப்பது அவற்றின் பிற்போக்குத்தனத்திற்காகவே. அதேபோல் இலங்கைத் திரைப்படங்களும் பிற்போக்குக்கு உதவுவதை நாம் வரவேற்க முடியாது.

இந்த நாட்டு மக்களின் முற்போக்கான ஆர்வ அபிலாஷைகளையும், புரட்சிகர அம்சங்களையும், பிற்போக்குக்கு எதிரான அம்சங்களையும் மையமாகக் கொண்டு படங்கள் தயாரிக்கப்பட வேண்டும். இந்த வழியில் இந் நாட்டின் திரைப் படத் துறை வளர வேண்டும் என்பதுதான் எமது அபிலாஷை.

★

### இலங்கையில் அந்நிய வர்த்தகர்களின் சுரண்டல்

கௌரவ இலங்கைப் பிரஜாவுரிமை பெற்று தேசிய முதலாளிகளென்ற பெயரில், ஜபர்ஜீக்களும், குண்டன்மல்களும், ஞானம் நாடார்களும் இலங்கையின் ஜவுளி உற்பத்தியில் குறிப்பாக நைலோன், டெட்ரின், டெக்ரோன், டெர்லின், ரேயன் ஆகியவற்றில் ஏகபோக உரிமையை நிலைநாட்டியுள்ளார்கள். இந்த அந்நியர்கள் தமக்குள்ள இலங்கைப் பிரஜாவுரிமையைப் பயன்படுத்தி இந்நாட்டு மக்களை எவ்வளவு கொள்ளையடிக்க முடியுமோ அந்த அளவு பகல் கொள்ளையடித்து சுரண்டுகிறார்கள்.

இந்தப் பொருட்களுக்கு விலையை நிர்ணயிப்பவர்களும் இந்த ஏகபோக முதலாளி

—6-ம் பக்கம் பார்க்க

# சாதிவெறியை அம்பலமாக்கும் கலைக் காட்சி

சாதி வெறி தாண்டவமாடும் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த சம்பவம் ஒன்று என் நினைவில் வருகிறது. உயர் சாதியைச் சார்ந்த ஒரு வாலிபன், தாழ்த்தப்பட்ட பெண்ணொருத்தியைக் காதலித்து அப் பெண்ணை திருமணம் செய்து கொண்டான். இத் திருமணத்திற்கு அவனது தாய் தந்தையரும், உற்றார் உறவினர்களும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர். ஆனால், இவற்றைப் பொருட்படுத்தாது அவ் வாலிபன் தன் காதலியை மனைவியாக்கிக் கொண்டான்.


நாட்கள் நகர்ந்தன. மண மகனின் பெற்றோர்களிடமிருந்து ஒரு நாள் கல்யாண விருந்துக்கு வருமாறு அவ் வாலிபனுக்கு அழைப்பு வந்தது. அழைப்பு அவனுக்கு மாத்திரமே. அவனது காதலிக்கல்ல. ஏதோ சிறிதளவாவது தனது பெற்றோர்கள் மனம் மாறி விட்டார்களென எண்ணிய அவ் வாலிபன் விருந்திற்காக தனது பெற்றோர் வீட்டிற்குச் சென்றான். தனது கடைசி உணவை உண்ணவே செல்லுகின்றேன் என்பது அவ் வாலிபனுக்குத் தெரியாது. விருந்து முடிந்ததும் படுக்கச் சென்று விட்டான். படுத்தவன் படுத்தவன்தான். மீளாத தூக்கத்தில் ஆழ்ந்து விட்டான். மறுநாள் பல வெட்டுக் காயங்களுக்குள்ளான அவனது உயிரற்ற உடல் ஓர் பற்றைக்குள் வீசிக் கிடக்கக் காணப்பட்டது. பெற்றோரும் ஏனைய உறவினர்களும் தமது உயர்சாதியின் பெருமையைக் குலைத்த ஒருவனை பழிவாங்கியதையிட்டு நிம்மதியடைந்தனர்.

இது ஏதோ கட்டுக்கதையல்ல. இது உண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த ஓர் சம்பவம். யாழ்ப்பாணக் குடாநாட்டு வாழ்வில் சாதிவெறி எவ்வளவு தூரம் அட்டூழியம் புரிகின்றது என்பதை எடுத்துக் காட்டுவதற்கு இந்தக் கதை ஒரு உதாரணமாகும்.

## வெட்கக் கேடு

கடந்த வருடம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் உயர்சாதியினருக்கும் ஆலயப் பிரவேசப் பிரச்சினையில் நடைபெற்ற மோதல்களை பனை ஓலைகளால் மூடி மறைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாண சமுதாயத்தின் பொட்டுக் கேடுகளை அம்பலப்படுத்தின. அச் சமுதாயம் எவ்வளவு தூரம் சீரழிந்துள்ளது என்பதற்கு இச் சம்பவம் ஓர் எடுத்துக் காட்டு. இவற்றை வெளியில் எடுத்துக் கூறுவதற்கும் யாரும் விரும்புவதில்லை. குடும்ப விவகாரத்தை அயலவர்கள் முன்னால் பேசவிரும்பாத குடும்பத்தினரைப் போன்று சீரழிந்த இச் சமுதாய நிலையையும், வெட்கக் கேட்டையும் ஒருவரும் எடுத்துக் கூறுவதில்லை. எப்போதும் இவற்றை மூடிமறைப்பதற்கே இதுவரை காலமும் முயன்றனர். உயர் சாதியினருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஏற்பட்ட மோதல்களின் பின்னர் இலங்கையில் ஏனைய பகுதிகளிலுள்ளோர் ஆனையிறவுக் கப்பால் என்ன நடக்கின்றது என்பதை அறிந்து கொண்டனர்.

ஏதோ தென் இலங்கையில் இத்தகைய சாதி வேறுபாடுகள் இல்லையென்றே அல்லது இத்தகைய அடக்குமுறைகள் இல்லையென்றே நான்கூற முற்படவில்லை. ஆனால், யாழ்ப்பாணத்தவர்களுடன் ஒப்பிடும் போது ஏனைய பகுதிகளில் நிலைமை சற்று முன்னேற்றம் அடைந்துள்ளது அவ்வளவுதான்.



"உயர்சாதி"யினரைப்போல உடையணிந்திருந்த ஒரு தாழ்த்தப்பட்ட பெண்ணின் சட்டையை உயர்சாதி வெறியர்கள் பலாத்காரமாகக் கிழிக்கின்றனர். இந்த ஓவியம் தீண்டாமை, சாதி அடக்குமுறையை ஒழிப்பதற்கான வெகுஜன இயக்கம் கொழும்பில் நடத்திய ஓவியக் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தது.

## மாற்றம்

கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சாதி வெறி மோதல்கள் ஏனைய பகுதிகளிலுள்ளோரை அதிர்ச்சியும், ஆத்திரமும் அடையச் செய்தன. சிலர் வெட்கியும் தலைகுனிந்தனர். இவை ஏதோ ஒரு நற்சகுனத்தின் அறிகுறி. ஏற்படக்கூடிய மாற்றத்திற்கு கோடி காட்டின.

நாம் இவ்வளவு காலமும், யாழ்ப்பாணத்து அரசியல்வாதிகள், உயர்தர உத்தியோகஸ்தர்கள், விதண்டாவாதப் பேராசிரியர்கள் ஆகியோர் சிங்களவர்கள் சிறுபான்மை இனத்தவருக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகள், அவர்களுக்கு எதிராக சிங்கள மக்கள் காட்டும் வேறுபாடுகள் ஆகியவற்றினைப் பற்றி இவர்கள் கூறும் அபிப்பிராயங்களைத் தான் நாம் கேட்டு வந்துள்ளோம். சிங்களவர்கள் சிறுபான்மையினரின் உரிமைகளைக் கூட மறுப்பதாக இவர்கள் குற்றம் சாட்டினார்கள். சமத்துவம், நீதி ஆகியவற்றிற்காக இவர்கள் கூறிய நியாயங்களைக்கூட பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தோம்.

ஆனால் யாழ்ப்பாண மண்ணிலே சாதி வேறுபாடு, அடக்கு முறைகள் ஆகியவற்றினைக் கொண்ட ஒரு சமுதாயம்-உயர்சாதியினர் ஆட்சிபுரியும் ஒரு சமுதாயம் உண்டென்பதை நாம் இவ்வளவு காலமும் அறிந்திருக்கவில்லை. அங்குள்ள உயர்சாதி கனவான்கள் இவற்றையெல்லாம் மறைத்துவிட்டு தென் இலங்கையில் வந்து மனித உரிமைகள், சகோதரத்துவம், சமத்துவத்தைப்பற்றியும் பேசித் தீர்க்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் நடக்கும் சாதி ஒடுக்குமுறைகளுக்கு உதாரணம் காண வேண்டுமானால், தென் ஆப்பிரிக்காவிலோ அல்லது அமெரிக்காவிலுள்ள மிகவும் பின்தங்கிய பிரதேசங்களுக்குப் போக வேண்டும்.

## சகிக்க முடியாத நிலை

கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் ஓர் எழுச்சி ஏற்பட்டது. அதே வேளையில் இவ்வெழுச்சியை அடக்குவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட மக்கள் பொறுமை இழந்து, ஆத்திரம் கொண்டு திரண்டெழுந்தனர். அடக்கி ஆள்வோர் ஈவிரக்கமின்றி தமது பலாத்காரத்தை கட்டவிழ்த்து விட்டனர். சில வேளைகளில் உயர்பதவிகளில் இருக்கும் உயர்சாதி வெறிபிடித்தவர்களின் பாதுகாப்பும் உயர் சாதியினருக்குக் கிடைத்தது. வரண்ட அமைதியான கிராமங்களில் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. கிணறுகளில் குப்பை கூழங்கள் கொட்டப்பட்டன. சில சந்தர்ப்பங்களில் விஷத்தையும் கிணறுகளில் கூற்றினர். அத்தோடு துப்பாக்கி வேட்டுகளும் ஒலித்தன. இக் கிராமங்களில் கிளர்ச்சியின் அதிரொலி கேட்டன. மூடி மறைக்கப்பட்ட, சமத்துவம் நிலவுகின்றதெனக் கருதப்பட்ட ஒரு சமுதாயத்தைப் பற்றி பல்லாண்டு காலமாகக் கொண்டிருந்த பல எண்ணங்கள் தவிடுபொடியாயின.

இந்த கிளர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு மிருகத்தனமான அடக்குமுறைகளையும் அடித்தளமாகக் கொண்டு தீட்டப்பட்ட ஓவியங்கள், விளம்பரங்கள், வரைபடங்கள், கேலிச் சித்திரங்கள் முதலியன இச் சித்திரக் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன.

> தீண்டாமை, சாதி அடக்குமுறையை ஒழிப்பதற்கான வெகுஜன இயக்கத்தின் கொழும்புக் கிளை மார்ச் 17, 18, 19ம் திகதிகளில் கொழும்பு லயனல் வென்ற் கலா மண்டபத்தில் ஒரு ஓவியக் கண்காட்சியை நடத்தியது. இக் கண்காட்சியைப் பற்றி மார்ச் 19ந் தேதி "சிலோன் ஒப்சேவர்" பத்திரிகையில் மெர்வின் த சில்வா என்பவரால் எழுதப்பட்ட கருத்துரையின் சுருக்கத்தை இங்கு பிரசுரிக்கின்றோம்.
>
> —ஆர்

இங்கு வைக்கப்பட்டிருந்த ஓவியங்கள் பொதுவாக லயனல் வென்ற் கலாமண்டபத்தில் அதிகமாகக் காட்சிக்கு வைக்கப்படுவதில்லை. உண்மையில் இவையெல்லாம் (அவர்களுக்கு "கலை" அல்லவே.

தீண்டப்படாதவர்களால் தீட்டப்பட்ட இவ் ஓவியங்கள் சித்திரக் கலைஞர்களாலோ அல்லது சித்திரக் கலையில் பட்டம் பெற்றவர்களாலேயோ தீண்டப்படாதவை.

இக் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த அத்தனை ஓவியங்களும் அங்குள்ள சம்பவங்களை எடுத்துக் காட்டும் உயிரோவியங்களாகும்.

சாதிவெறி பிடித்த வடக்கில் இன்று நடைபெறும் கிளர்ச்சிகள், கண்டங்கள், பிரசாரங்கள் ஆகியவற்றின் ஒரு பகுதியாகும் இந்த சித்திரக் கண்காட்சி.

காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த ஓவியங்களில் ஒன்றில் நான்கு பெண்கள் கிணற்றைச் சுற்றி இருக்கிறார்கள். இப்படியான ஓவியங்களை கலைஞர் பலர் அதிகமாக வரைவதுண்டு. ஆனால் இந்த ஓவியத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கம் யாழ்ப்பாணத்துச் சமுதாய நிலையையே படம் பிடித்துக் காட்டுகிறது. இந்த நான்கு பெண்களும் உயர்சாதி பெண்ணொருத்தியின் வரவை எதிர்நோக்கியிருக்கின்றனர். அவள் வந்து தண்ணீர் அள்ளி தமது குடங்களில் விடும்வரை அவர்கள் காத்திருக்க வேண்டும்.

கலை அபிமானிகள் இவற்றைப் பார்த்து சந்தோஷம் கொள்ளமுடியாது. ஆனால், சாதிவெறி எதிர்ப்புப் பிரச்சாரத்திற்காக இவ் ஓவியங்கள் திறமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. எம்மிடையேயுள்ள மனித சமுதாயக் கேடுகளை களைந்து எறிவதற்கு இவ் ஓவியங்கள் பயன்படும் என நம்புகிறேன்.

நாட்டுப்புறங்களில் விவசாய இயக்கங்களை அபிவிருத்தி செய்வதற்கான புரட்சிகர மூலஉபாயம் எப்போதுமே திரிபுவாத மூல-உபாயம் போன்றது அல்ல. பல வருடங்களாக விவசாய இயக்கங்களை அபிவிருத்தி செய்ய நாம் கையாண்ட முறைகள் யாவும் திரிபுவாத மூல — உபாயம் என்றேஅழைக்கப்படத் தகுதி வாய்ந்தவை. கட்சியின் நடவடிக்கைகளை வெளிப்படையாக வைத்திருக்கும் நோக்கத்துடனேயே திரிபுவாதம் விவசாய இயக்கங்களில் வேலை செய்கின்றது. அது புத்திஜீவிகளான கட்சித் தலைவர்களிலேயே இயக்கங்களுக்காக தங்கிநிற்கின்றது. அதன்பலனுக, அவர்கள் விவசாயக் குழுக்களை நிறுவியும் வெளிப்படையான பிரச்சாரங்கள் நடத்தியும், உயர் தலைவர்களின் பேச்சுக்களுடன் அவர்களது இயக்கங்களைத் தொடங்குகின்றனர். இயற்கையாகவே, அத்தகைய இயக்கங்கள் முற்றுக பெருந் தலைவர்களிலேயே தங்கிநிற்பதால், புத்திஜீவிகளான அத் தலைவர்கள் அவற்றை வாபஸ்பெற விரும்பியபோது அப் போராட்டங்களும் முடிவடைகின்றனர். மேலும், முழு பிரசாரமும் இயக்கமும், வெளிப்படையாகவே நடந்தப்படுகின்ற காரணத்தால்' அடக்குமுறைக்கு முன்னுல் முழு ஸ்தாபனமுமே எதுவும் செய்ய முடியாத நிலையை அடைகின்றது.

கணிப்பீடு செய்வது என்பது பற்றியும் அக் கமிட்டிகள் அறிந்துகொள்ள வேண்டும். ஆராய்ச்சியும் கற்றலும் ஆகிய இம்முறையை நீண்டகால நடைமுறையினூடாகவே தெளிந்து கொள்ளலாம். எனவே இக் கமிட்டிகளின் ஆரம்பத்தில் பல விலகுதல்கள் உண்டாகும் என்பது தெளிவாகின்றது. ஆனல் இது பற்றி நாம் அஞ்சக் கூடாது. ஏனெனில் நாம் யுத்தத்தின் மூலமே யுத்தத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும் என தலைவர் மாஓ கூறியுள்ளார். இந்த விலகுதல்களிலிருந்து எவ்வாறு சரியான தீர்மானங்களை எடுக்கலாம் என கட்சிக் கமிட்டிகள் ஜனநாயகக் கோட்பாடுகளை பின்பற்றினுல் தெளிந்து கொள்ளலாம்.

புரட்சிகர வர்க்கங்களிடையே முன்னேறிய பிரிவு, பின்

களின் உணர்வில் ஆழமாக வேர்விட நீண்டகாலம் பிடிக்கும். அதன் பலனுக, போராட்டத்தில் அரசியல் ஆதிக்கம் குறைந்து கொண்டு போவதுடன் ஆயுதங்களில் மாத்திரம்

தீவிரமாக்குகின்றனர்; அவர்களது சுரண்டலின் சுமை கடைசியில் விவசாய வெகுஜனங்களின் தோள்களிலேயே விழுகின்றது. வறுமையும் பட்டினியும் விவசாயிகளின்

## சாரு மஜும்தார்

நம்பிக்கை வைக்கும் போக்கு வளர்ந்துகொண்டே போகும். கொரில்லா யுத்தமுறை, அரசியல் தலைமைக்குட்பட்ட விவசாயிகளின் வர்க்கப் போராட்டத்தின் ஒரு உயர்ந்த வடிவமாகும். வர்க்க ஆராய்வு, ஆராய்ச்சி, கற்றல், வர்க்கப் போராட்டம் ஆகிய நான்கு ஆயுதங்களை வெற்றிகரமாகப் பாவிப்பதனுல் மட்டுமே நாம் விவசாயிகளின் ஆயுதந் தரித்த போராட்டப் பகுதிகளை உருவாக்க முடியும்.

வாழ்க்கையைத் தாங்கமுடியாததாக ஆக்கியுள்ளன; எனவே குழப்பங்கள் தாமாகவே வெடித்துக் கிளம்புவது இயற்கையானதாகும். அதுபோலவே, அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் சோவியத் திரிபுவாதத்தினதும் அடக்குமுறை மற்றவர்களிடையேயும் அமைதியின்மையை கிளப்பிவிட்டுள்ளது; அது விவசாய வெகுஜனங்களை ஊக்குவிக்கின்றது. மறுபுறத்தில், இந்தியாவிலுள்ள சகல அரசியல் கட்சிகளும் ஆளும் வர்க்கங்களின் கட்சிகளாக மாறியுள்ளதுடன், அவை ஒவ்வொன்றும் பலவித ஏமாற்று வழிமுறைகளைப் பாவித்து வெகுஜனங்களை அமைதியாக வைத்திருக்க முயற்சியெடுக்கின்றன. டாங்கே துரோகக் கும்பலும், புதிய—திரிபுவாதக் கும்பலுமே இவ்வாறு செய்வதில் மிகப் பரிச்சயமாக உள்ளன. அவர்கள் மார்க்சிஸ—லெனினிஸ முகமூடியை அணிந்து கொண்டும், போலி—புரட்சிகர பேச்சு வார்த்தைகள் மூலமும் வெகுஜனங்களை குழப்பத்தில் மூழ்கடிக்க முனைகின்றனர். ஆனல் செக்கோஸ்லவேக்கியா மீதான சோவியத் திரிபுவாதிகளின் பாசிஸ ஆக்கிரமிப்பு அவர்களது முகத்திரையைக் கிழித்தெறிந்ததுடன், கடந்துபோகும் ஒவ்வொரு நாளும் அவர்களை, இன்று நவீன—காலனித்துவ வெறி கொண்டதும், உலகின் ஆக்கிரமிப்பு வல்லரசுகளுள் ஒன்றுனதுமான சோவியத் யூனியனின் வெளிப்படையான கைக்கூலிகளாக தோலுரித்துக் காட்டுகின்றன. அவர்கள் எவ்வளவு தூரம் தோலுரித்துக் காட்டப்படுகின்ருர்களோ அவ்வளவு தூரம் வெகுஜனங்களின் எதிர்த்தாக்குதல் யுத்தம் வேகமாகக் கட்டவிழ்த்துவிடப்படுவதுடன், விவசாயிகளின் பரந்த வெகுஜன இயக்கத்தின் சாத்தியக் கூறும் யதார்த்தமாக மாறும்.எனவே இன்று, விவசாயிகளை வர்க்க உணர்வுடையவர்களாக மாற்றுவதும் பரந்த வர்க்கப் போராட்டங்களை ஏற்பாடு செய்வதும் தொழிலாளி வர்க்கத்தினதும் புரட்சிகர புத்திஜீவிகளினதும் கடமையாகும். கோடிக்கணக்கான இந்திய விவசாயிகள் நாட்டுப்புறங்களில் ஆயுதந்தரித்த போராட்டத்தின் பரந்த பகுதிகளை கட்டியமைக்கின்றதும் உலகப் புரட்சிகர விடுதலைப் போராளிகளின் நிலைகளில் உயரிய ஒரு இடத்தைப் பெறுகின்றதுமான நாள் வெகு தூரத்தில் இல்லை. மகத்தான சீனுவினதும் இந்தியாவினதும் போராடும் மக்களது ஐக்கியம், உலக ஏகாதிபத்தியத்தை சவக் குழிக்குள் இடும் என்ற மாபெரும் லெனினது கனவை யதார்த்தமாக்கும் பணியில் சகல புரட்சியாளர்களும் தாமதமின்றிக் குதிக்க வேண்டும்.

# வர்க்க போராட்டத்தை அபிவிருத்தி செய்ய

விவசாய இயக்கங்களை அணிதிரட்டுவதற்கான புரட்சியாளர்களின் மூல - உபாயங்கள் திரிபுவாத மூல - உபாயங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருக்க வேண்டும். தலைவர் மா ஓவின் சிந்தனைகளை பரப்புவதும், பிரசாரம் செய்வதும், விவசாயிகளின் வர்க்கப் போராட்டத்தை தீவிரமாக்க முயல்வதுமே புரட்சியாளர்களின் முழுமுதற் கடமையாகும். கட்சி ஸ்தாபனம் பிரசாரத்தை இரகசியக் கூட்டங்கள் மூலம் ஒழுங்கு செய்ய வேண்டும். பழைய முறையில் வேலை செய்து பழக்கப்பட்டவர்களான விவசாயிகள் கூட்டங்களும், ஊர்வலங்களும் நடத்தும் படி கேட்கக் கூடும். அத்தகைய சந்தர்ப்பங்களில் இரண்டொரு கூட்டங்களை ஊர்வலங்களை கட்சி ஸ்தாபனம் ஒழுங்கு செய்ய வேண்டும்.

ஆனல், ஊர்வலங்களும் கூட்டங்களும் எந்த நேரத்திலும் எமது போராட்டத்தின் பிர

இரண்டாவது விலகுதல் ஏற்படுகின்றது இது வலது சாரி விலகுதலை தோற்றுவிக்கின்றது.

### வெகு ஜனங்களிடமிருந்து கற்க வேண்டும்

எனவே. வெகுஜனங்களின் விருப்பத்துக்கு மாருக நாம் எதையும் திணிக்கக் கூடாது என்பதே முதலாவது கோட்பாடாகும். இதை நாம் மறந்தால், ஒருமுனைவாதம், காஸ்ட்ரோயிஸம் என்று பலவகையாக அழைக்கப்படும் விலகுதல்கள் எனும் தவறை இழைக்க நேரிடும். இதைத் தவிர்ப்பதற்கு நாம் விவசாயி

தங்கி பிரிவு என இரண்டு பகுதிகள் உள. முன்னேறிய பிரிவு புரட்சிகரக் கோட்பாடுகளை சீக்கிரத்தில் கிரகித்துக் கொள்ளும் அதே வேளையில், அரசியல் பிரசாரங்களைக் கிரகித்துக் கொள்ள பின்தங்கிய பிரிவு கூடிய நேரத்தை எடுக்கின்றது.

எனவேதான் நிலப்பிரபுத்துவ வர்க்கத்துக்கெதிரான பொருளாதாரப் போராட்டங்கள் இப்போது மாத்திரமல்ல வருங்காலத்துக்கும் தேவையாக உள்ளன. எனவேதான் பயிர்வகைகளை கைப்பற்றும் இயக்கம்தேவையாக உள்ளது. இப் போராட்டம் எத்தகைய

எமது நாட்டிலுள்ள செல்வ்ந்த விவசாயிகள் பிரதானமாக நிலப்பிரபுத்துவ சுரண்டலிலேயே தங்கியுள்ளனர். எனவே அவர்களுடன் எமக்குள்ள தொடர்பு பிரதானமாக போராட்டமேயாகும். ஆனல் அவர்களும் ஏகாதிபத்தியச் சந்தைச் சுரண்டலுக்கு உட்பட்டிருப்பதால் போராட்டத்தின் சில கட்டங்களில் அவர்களுடன் ஐக்கியப்படுவது தவிர்க்க முடியாததாகும். இச் செல்வந்த விவசாயிகள் தவிர, மற்றும் சகல விவசாயிகளையும் ஆதரவாளர்களாக மட்டுமல்லாது போராட்டத்தில் பங்குகொள்பவர்களாகவும் அணிதிரட்ட முடியும். சிறு நிலமுடைய விவ

# வர்க்க ஆராய்வு, ஆராய்ச்சி, கற்றல் ஆகியவை அத்தியாவசியம்

தான ஆயுதமாக மாறக் கூடாது. இந்தப் புரட்சிகர வழியை கைக்கொள்வது மிகவும் கஷ்டமானதாகும். ஆனல் புரட்சிகர புத்திஜீவிகள் தொடக்கத்திலிருந்தே மறைமுகமாக வேலை செய்ய ஆரம்பித்தால் இதைச் செய்ய முடியும். அப்போது தான் அவர்கள் விவசாயப் புரட்சியாளர்கள் மீது தங்கி நிற்பவர்களாக இருக்கத் தூண்டப் படுவர். விவசாயப் புரட்சியாளர்கள் தாமாகவே போராட்டத்தைத் தொடங்காத வகையில் வெகுஜனங்கள் ஆயத்தமாக இல்லை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும், அத்துடன் எமது கருத்துக்களை விவசாய வெகுஜனங்கள் மீது நாம் திணிக்கவும் கூடாது. விவசாய ஊழியர்கள் எதையேனும் செய்ய விரும்பும் போது, புத்திஜீவித் தோழர் மிகவும் பின்தங்கிய தோழரின் கருத்துக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து அதையே பொதுக் கருத்தாக ஏற்றுக் கொள்ளும் போது

களிடையே இடையருது அரசியல் பிரசாரம் செய்ய வேண்டும். அத்தகைய பிரசாரங்களின் பலனுக அரசியல் பிரசாரங்கள் செய்யும் வல்லமை பொருந்திய அரசியலை நாம் வளர்த்தெடுக்கலாம். அத்தகைய ஊழியர்களின் இரகசிய ஸ்தாபனம் வருங்காலத்தில் கட்சியாக மாறும். இந்த ஸ்தாபனத்தைக் கட்டியமைப்பதற்கு கட்சிக் கமிட்டிகளை நிர்வகிப்பதற்கு கையாளப்படும் கொள்கைகளையே நாம் பின்பற்ற வேண்டும். அத்தகைய கட்சிக்கமிட்டிகள் வேலை செய்வதற்கென திட்டவட்டமான ஒரு பகுதி இருக்க வேண்டும், அப்பகுதியில் வர்க்க ஆராய்வு நடத்துவது எவ்வாறு என்பது பற்றியும், ஆராய்ச்சியினுலும் கற்றலினுலும் மக்களின் ஒவ்வொரு பிரிவினரதும், விருப்பங்களையும் எண்ணங்களையும் எவ்வாறு

உருவம் எடுக்க வேண்டும் என்பதை அப் பகுதியிலுள்ள அரசியல் உணர்வும் ஸ்தாபனமுமே நிர்ணயிக்கின்றன. இப் போராட்டம் இயற்கையாகவே நிலப்பிரபுத்துவ வர்க்கத்துக்கு எதிராகவே தொடுக்கப்படும்; அதாவது, பயிர் செய்யாத நிலச் சொந்தக்காரருக்கு எதிராக அதாவது ஜிமீன்தார் வர்க்கத்துக்கு எதிராகவே அன்றி நடுத்தர விவசாயிகளுக்கு எதிராக அல்ல.

### அதிகாரத்தைக் கைப்பற்றும் அரசியல் உணர்வை வளர்க்க வேண்டும்

விவசாயிகளின் பரந்த இயக்கத்தை அபிவிருத்தி செய்யவும், பரந்த வெகுஜனங்களை இயக்கத்தினுள் இழுக்கவும் நாம் முயலாவிடின், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான அரசியல்,விவசாய வெகுஜனங்

சாயிகளும் நிலமற்ற விவசாயிகளும் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின்கீழ் பரந்த விவசாய வெகுஜனங்களின் போராடும் ஐக்கியத்தை கட்டியமைக்க முடியும். அத்தகைய ஐக்கியம் எவ்வளவு வேகமாக உருவாக்கப்படுகின்றதோ அவ்வளவு வேகமாக போராட்டமும் புரட்சிகர உருவத்தை எடுக்கும். தலைவர் மாஓவின் போதனையை நாம் மனதில் வைத்திருக்கவேண்டும். "புரட்சிகர யுத்தம் வெகுஜனங்களின் யுத்தமாகும்; வெகுஜனங்களை அணிதிரட்டி அவர்களில் தங்கி நிற்பதன் மூலம் மட்டுமே அது நடாத்தப்பட முடியும்."

### லெனின் கனவை நனவாக்குவோம்

அமெரிக்க ஏகாதிபத்தியமும், சோவியத் திரிபுவாதமும் இந்தியா மீதான தமது அடக்குமுறையையும் சுரண்டலையும்

இக் கட்டுரை இந்தியாவிலிருந்து வெளிவரும் "லிபரேசன்" என்ற ஆங்கிலப் பத்திரிகையிலிருந்து எடுக்கப் பட்டது. —ஆர்

# சோவியத் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் கொசிஜின் கும்பல்

## உலக வலம்

உஸ்மான்

சில வாரங்களுக்கு முன்னர் ஜப்பானிய மாணவர்களினதும் பொதுமக்களினதும் ஏகாதிபத்திய எதிர்ப்பைப் பற்றி நான் எழுதியிருந்த பொழுது சோவியத் திரிபுவாதிகளைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். ஜப்பானிய கம்யூனிஸ்ட் கட்சியின் திரிபுவாதிகளோடு மட்டுமன்றி, படுபிற்போக்கு சாட்டோ அரசாங்கத்துடனுஞ் சேர்ந்து துரோகச் செயல்கள் பல புரிகிறது சோவியத் திரிபுவாதக் கும்பல்.

1917ல் மகத்தான ஒக்டோபர் புரட்சி வெற்றியடைந்த காலத்திலிருந்து குருஷ்சோவ் கும்பல் அதிகாரத்தையும் கட்சித் தலைமையையும் கைப்பற்றிய காலம் வரை, தேசபாதுகாப்பை முன்னிட்டுச் சோவியத் அரசாங்கம் அந்நிய விமானம் சைபீரியாவுக்கு மேலாகப் பறந்து செல்ல அனுமதித்தது கிடையாது. அதுமட்டுமல்லாது இதற்கு முன்னர் ஒரே ஒரு தடவைதான் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர் அந்தப் பிராந்தியத்திலே காலடியெடுத்து வைத்திருக்கின்றனர். 1918-ல் புதிதாகப் பிறந்த சோஷலிஸ ஆட்சியை கவிழ்ப்பதற்காக பதினுன்கு நாடுகளின் படைகள் தலையிட்டபோதே ஜப்பானியர் சைபீரியாவிற் பிரவேசித்தனர். அது படுதோல்வியில் முடிந்தது.

இப்பொழுது ஜப்பானிய முதலாளித்துவத்தை 'வருக வருக' என வரவேற்றுள்ளது சோவியத் திரிபுவாதக்கும்பல். தனது சீன எதிர்ப்பு நடவடிக்கைகளையும் கணக்குப்பார்த்து அமெரிக்க தாசனுன சாட்டோ குழுவுடன் ஒன்றன் பின் ஒன்ருகப் பல அவசர ஒப்பந்தங்களைச் செய்துள்ளது ரஷ்யா. இது சோவியத் இறைமையையும், மக்கள் நலனையும், தேசகௌரவத்தையும் மானமற்ற முறையில் சோரம் போக்குவதாகும்.

கடந்த மாதம் 13ந் தேதி சோவியத் திரிபுவாத சிவில் விமானப் போக்குவரத்து மந்திரியும் ஜப்பானிய போக்குவரத்து மந்திரியும் டோக்கியோவில் விமானப் போக்குவரத்து உடன்படிக்கை ஒன்றிற் கைச்சாத்திட்டனர். இதன் பிரகாரம் சைபீரியாவுக்கு மேலாகப் பறப்பதற்கு ஜப்பானிய பிற்போக்கு வாதிகள் கட்டுப்பாடற்ற உரிமைகளைப் பெற்றுள்ளனர். 1966ம் ஆண்டிலே செய்யப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின்படி மொஸ்கோ—டோக்கியோ விமான சேவை தொடங்கப் பெற்றிருந்தது. அதன் பயனுக சோவியத் விமானங்கள் இதுவரை போய் வந்தன. இப் பொழுது ஜப்பானிய ஏயர் லைன்ஸ் ''சுதந்திரமாக'' ரஷ்யாவுக்கு மேல் பறக்க வாய்ப்பேற்பட்டுள்ளது.

இந்த வைபவத்திற் கலந்து கொள்ளும் பொருட்டு ஜப்பான் சென்ற சோவியத் திரிபுவாத மந்திரி லொகினுவ் தனது தலைவன் கொசிஜினிடமிருந்து ஜப்பானிய பிரதமர் சாட்டோவுக்கு கடிதம் ஒன்றைக் கொண்டு சென்ருனும். இரு நாடுகளுக்குமிடையில் ''பிணைப்புகள்'' இன்னும் பல்கிப் பெருக வேண்டும் என்று கொசிஜின் நல்லெண்ணம் தெரிவித்தாராம்.

கொசிஜின் குறிப்பிட்டுள்ள இந்த நல்லெண்ணத் தொடர்பின் அடிப்படையாது? நாமறிந்ததே; ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள தொடர்புடன் சோவியத் யூனியனை இறுகப்பிணைப்பதே திரிபுவாதிகளின் இலட்சியமாகும். அதாவது சீனுவுக்கு எதிராக கிழக்கிலே அமெரிக்க ஏகாதிபத்தியம்- ஜப்பானிய பாசிஸம் சோவியத் திரிபுவாத சமூக ஏகாதிபத்தியம் ஆகியன ஒன்றுசேர்ந்து இயங்குவதே இவ்விலட்சியமாகும். ஆனல், இது தவறான - அநியாயமான

## ஜப்பானிய பிற்போக்காளருடன் இன்பம் காண்கின்றனர்

## சோவியத் திரிபுவாதிகளுக்கு, யங்கி நிக்ஸனின் புகழ்மாலை

இலட்சியமாக இருப்பதால் முழுத்தோல்வியடைவது உறுதி. பகற்கனவில் இன்பம் காண்கிறது சோவியத் திரிபுவாதக் கும்பல்.

◎

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பலவிதமான சிக்கல்களையும் முரண்பாடுகளையும் எதிர்நோக்கும் அமெரிக்க ஜனதிபதி நிக்ஸன் சென்ற வாரம் டெலிவிஷனில் தோன்றி ஒருமணி நேரம் அரசியல் விவகாரங்கள் பற்றிப் பத்திரிகை நிருபர்களுடன் உரையாடினுராம். மேனுட்டு பூர்ஷ்வா பத்திரிகைகள் இச்சாதனையைப் பற்றிப் பக்கம் பக்கமாக எழுதியுள்ளன. ஆனல் இந்தப் பேட்டியின் போது நிக்ஸன் சோவியத் யூனியன் குறித்துக் கூறியன சுவையானவை. உலக சமாதானத்தைப் பற்றிப் பலவாருகப் பேசிய நிக்ஸன், உலகின் பல பாகங்களிலே இன்று அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டும் ''பெரும் பணியில்'' சோவியத் யூனியன் முக்கிய பாத்திரம் வகிப்பதாகக் குறிப்பிட்டார். காலப்போக்கில் மென்மேலும் அமெரிக்க—சோவியத் ஒத்துழைப்பு அதிகரிப்பதால் உலக சமாதானம் ஸ்திரமடையும் என்ருர். சுருங்கச் சொன்னல் இன்று சமாதானத்தை நிலைநாட்டுவதில் ரஷ்யாவை நம்பலாம் என்ருர். இது கொசிஜின் கும்பலுக்குத் தலையில் 'ஐஸ்' வைத்தது போலிருக்குமல்லவா?

குருஷ்சோவ் காலத்தில் பதவியிலிருந்த ஐஸனேவரிலிருந்து, கென்னடி, ஜோன்சன், நிக்ஸன் ஆகிய யாவரும் சோவியத் திரிபுவாதிகளுக்கு நற்சான்றிதழ்கள் வழங்கிய வண்ணமாகவே இருக்கின்றனர். சோவியத் திரிபுவாதிகளின் ''சமாதான முயற்சி'' என்று நிக்ஸன் போன்ருேர் கூறுவதன் பொருள் எமக்குத் தெரியும்தானே. தேசிய விடுதலை இயக்கங்களைத் திசைதிருப்பி மழுங்கச் செய்து எதுவித புரட்சிக் கனலையும் எழவிடாது எதிர்ப் புரட்சித் தண்ணீரை ஊற்றுவதே இச் ''சமாதான முயற்சி'' யாகும்.

நிக்ஸனது முக்கியமான இக் கொள்கை விளக்கப் பேச்சைத் தொடர்ந்து சோவியத் திரிபுவாதக் கும்பலும் பரஸ்பரம் தனது மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்திருக்கிறது. அதுமட்டுமல்லாது நிக்ஸன் பேச்சிலே தெரிவிக்கப்பட்ட நம்பிக்கையை மேலும் நிருபிப்பதுபோலச் செயலிலும் காட்டத் தொடங்கியது.

செக் நாடகத்தாலும், பேர்லின் நகைச்சுவைச் சித்திரத்தாலும் மனம் நொந்த நிக்ஸன் சோவியத் யூனியனுடன் ''கடுமையாக'' நடந்துகொள்ளக் கூடும் என்று சில அவசரக் குடுக்கைகள் அபிப்பிராயம் தெரிவித்திருந்தன. ஆயினும், அமெரிக்காவிலுள்ள சோவியத் திரிபுவாதத் தூதுவர் அனட்டோலி டொப்றினின்தான் தனது தலைவர்களுக்கு எழுதிய அறிக்கைகளில் நிக்ஸன் மனம் மாறிய ''புதிய'' மனிதன் என்றும் ஜோன்சனைவிட நல்லவர் என்றும் குறிப்பிட்டிருந்தாராம். இதன் காரணமாக இடமாற்றலில் செல்லவிருந்த டொப்றினின் நிக்ஸன் ஆட்சியில் தொடர்ந்து தூதுவராக இருக்கவிடப்பட்டிருக்கிருராம். அமெரிக்க வெளிநாட்டமைச்சும் டொப்றினினையே விரும்புகின்றதாம், இது அமெரிக்க—சோவியத் ஒத்துழைப்பின் தன்மையைத் தெளிவாகக் காட்டுகிறது.

இன்னெரு உதாரணம்: ''நல்ல பிள்ளை'' என்று பாராட்டிய நிக்ஸன் குழுவை மேலும் மகிழ்ச்சியூட்டித் திருப்திப் படுத்துவதற்காக லாவோஸ் நாட்டில் ''அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்ட'' சோவியத் திரிபுவாதத் தலைமை பெரிதும் முயல்கின்றது. இதனையும் சில தினங்களுக்கு முன் அமெரிக்க ராஜாங்க அமைச்சுத் தொடர்புடைய நியூஸ்வீக் ஏடு பாராட்டியிருக்கிறது. அங்கிருந்து வெளியான செய்திகளின்படி லாவோசிலுள்ள சோவியத் தூதுவர் விக்டர் மினினி அரசாங்கத் தரப்பையும், லாவோஸ் விடுதலை முன்னணியையும் ஒற்றுமைப்படுத்தவும் இருதரப்பினருக்குமிடையே யுள்ள வேறுபாடுகளைக் குறைக்கவும் படாதபாடுபடுகிருர். வியந்தியானிலுள்ள அமெரிக்க ராஜதந்திரி இம் முயற்சியைப் பாராட்டியிருக்கிருர்.

மேனுட்டுப் பத்திரிகை விமர்சகர்கள் இச் செய்திபற்றி எழுதும்போது தென்கிழக்காசியாவிலே சீனக் கட்சியின் செல்வாக்கைக் குறைப்பதும், புரட்சிகர மாற்றத்துக்கு பதில் நடவடிக்கை காண்பதுவுமே இச் சோவியத் ராஜதந்திர முயற்சியின் பிரதான நோக்கமாக இருக்கலாம் என்று கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இன்னுமோர் உதாரணம்: பாரிசில் நடக்கும் வியட்நாம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நல்ல முறையில் நடக்க வேண்டும் என்று சோவியத் யூனியன் அமெரிக்காவிடம் கூறியது மாத்திரமல்லாது பல சமயங்களில் சோவியத் ராஜதந்திரிகளே 'தரகு' வேலை பார்த்தனர் என்றும் அமெரிக்க எழுத்தாளர்கள் இப்பொழுது கூறுகின்றனர். சமீபத்தில் வியட்நாமிய விடுதலை முன்னணியினர் தாக்குதல்கள் நடாத்துவது சோவியத் யூனியன் அமெரிக்காவுக்கு அளித்த அந்தரங்கமான உத்தரவாதங்களை மீறுவதாயிருக்கிறது என்று முன்னைநாள் பிரதம அமெரிக்கப் பிரதிநிதி அவெரெல் ஹரிமன் சென்றவாரம் பத்திரிகை நிருபர் ஒருவரிடம் கூறினுர்.

தேசிய விடுதலையினரின் கையையும் வாயையும் கட்டும் முயற்சியில் சோவியத் திரிபுவாதத் தலைமைப் பீடம் விடாப்பிடியாக ஈடுபட்டு வருவதைப் பாராட்டித்தான் நிக்ஸன் ''உலகின் பல பாகங்களில் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டும்'' பணியில் ரஷ்யா முனைந்திருக்கிறது என்ருர்.

◎

### லத்தீன் அமெரிக்காவிலும் துரோகம்

ஆசியாவில் மட்டுமன்றி லத்தீன் அமெரிக்கப் பிராந்தியத்திலும் ''அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்ட'' அமெரிக்காவுக்கு சோவியத் யூனியன் உதவ முன்வந்திருக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அந்தப் பிராந்தியத்தில் மக்கள் கோபம் கொழுந்து விட்டுக் கொண்டே இருக்கிறது. தமது நாடுகள் யங்கிகளுடன் வியாபாரம் செய்யலாகாது என்பது மக்கள் விருப்பம். அதுமட்டுமல்ல. லத்தீன் அமெரிக்க நாடுகளிலே மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் குழுக்களும், கட்சிகளும் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றன. மா சே-துங் சிந்தனை படர்ந்து வருகிறது. ஆயுதம் ஏந்திய மக்கள் யுத்தக் கோட்பாடு உரம் பெற்று வருகிறது. இந் நிலையில் எதிர்புரட்சிக்கு வழிகாட்ட திரிபுவாத ரஷ்யாவே தகுதியுடையது என்று அமெரிக்காவும் ஏற்றுக் கொள்கிறது.

லத்தின் அமெரிக்க நாடுகள் இயற்கை வளத்தால் சிறந்தவை. ஆனல் இன்றுவரை அமெரிக்க ஏகபோக முதலாளித்துவத்தின் வேட்டைக்களமாக இருந்து வருகிறன. லத்தீன் அமெரிக்க நாடுகளின் இராணுவ சர்வாதிகாரிகள் அமெரிக்க சி. ஐ. ஏ. யின் கைப் பொம்மைகள். அமெரிக்க அனுமதியின்றி அனுவளவும் அசையமாட்டாதவர்கள். அத்தகைய பிராந்தியத்திலே திடீரென திரிபுவாத சோவியூனியனுக்கு நல்ல வரவேற்பிருக்கிறது.

பெரு தேசம் முதன்மையாக சோவியத் யூனியனுடன் ராஜதந்திர உறவு ஏற்படுத்தவிருக்கிறது; ஈக்குவடோர் நாடும் அவ்வாறே தூதுவர் பரிமாற இருக்கிறது. வெனிசூலா பெருமளவிலான எண்ணெய் (பெற்ருேல்) பண்டமாற்று ஒப்பந்தம் ஒன்றையும் ராஜதந்திர உணர்வையும் ஏற்படுத்த முனைந்துள்ளது. இவை யாவும் ஏன் திடீரென நடைபெற வேண்டும்?

மேனுட்டு சர்வதேச அரசியல் விமர்சகர் ஒருவர் கூறுவதாவது; ''ரஷ்யாவிலிருந்தும் சீனுவிலிருந்தும் மாறுபடுவதாகக் கூறிக்கொள்ளும் கியூபா அப்பாவித்தனமாக ''புரட்சி'' மார்க்கத்தை அந்தக் கண்டத்தில் பிரசாரஞ் செய்கிறது. ரஷ்யா அதை முறியடிக்க வழி கண்டுவிட்டது.'' எங்கு பார்த்தாலும் ஏகாதிபத்தியவாதிகளின் வாயிலிருந்து சோவியத் திரிபுவாதிகளுக்குப் புகழ்மாலைதான் கிடைக்கிறது. இதுதானே திரிபுவாதத்தின் தருக்கரீதியான முடிவு? இதுதானே அவர்களது சொர்க்கம்!

# சியாங்கை - ஷேக் கோஷ்டியுடன் சோவியத் திரிபுவாதிகள் குலாவல்

சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் 70 கோடி சீன மக்களின் பகிரங்க எதிரியான சியாங்கை—ஷேக் கொள்ளைக் கோஷ்டியுடன் அதனுடைய எதிர்ப்புரட்சி ஒத்துழைப்பை தீவிரப்படுத்திக் கொண்டிருக்கின்றது. மகத்தான மக்கள் சீன குடியரசிற்கெதிராக கொலைபாதக குற்ற நடவடிக்கைகளைச் செய்து கொண்டிருக்கும் சியாங் கை—ஷேக் கொள்ளைக் கோஷ்டியுடன் சந்தித்துப் பேசுவதற்காக, சீனவின் பிரதேசமான தைவான் மாகாணத்திற்கு சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் அண்மையில் ஒரு ''பத்திரிகையாளனை'' அனுப்பியது. சீன மக்களுக்கு எதிராக சோவியத் திரிபுவாத சோஷல் ஏகாதிபத்தியத்தினுல் புரியப்பட்ட ஒரு பகிரங்கமான ஆத்திரமூட்டலாகும் இது.

அக்டோபர் மாத இறுதியில், தமது ரகசிய நடவடிக்கைகளை செய்வதற்கு ஒரு பத்திரிகையாளன் என்ற தோரணையில், சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பலின் கட்டளையின் பேரில் விக்டர் லூயிஸ் என்ற பெயரின் கீழ் (அவனுடைய உண்மைப் பெயர் யெவிக்னி யேவிச் விற்றிலி) தைவான் மாகாணத்திற்குள் சென்ருன் என்று மேற்கு நாடுகளின் பத்திரிகை, செய்தி நிலையங்கள் வெளிப்படுத்தியுள்ளன. தாய்பெயில் அவன் இருந்த காலத்தில், சியாங் கை—ஷேக் கொள்ளைக் கோஷ்டியின் ''பாதுகாப்பு மந்திரி'' சியாங்-கோவுடன் பல கூட்டங்களை நடத்தினுன். மகத்தான மக்கள் சீன குடியரசிற்கெதிரான சதிகள் பற்றி அவர்கள் ஒரு ''கருத்துப்பரிமாறல்களை'' நடத்தினர். சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பலின் சார்பாக விக்டர் லூயிஸ் சோவியத் யூனியனிற்கு ''விஜயம்'' செய்வதற்கு ''பத்திரிகை செய்தியாளர்களை'' அனுப்புவதற்கு சியாங் கை-ஷேக்கிற்கு ''உத்தியோகப் பற்றற்ற அழைப்பை'' கொடுத்தான். மாஸ்கோவிற்கு திரும்பிவந்தபின்பு விக்டர் லூயிஸ் ஒரு பத்திரிகைப் பேட்டியில் சியாங் கை-ஷேக் கொள்ளைக் கோஷ்டியின் ''நேர்நிலையான அம்சங்கள்'' பற்றி வெட்கமில்லாமல் புகழ்மாரி சொரிந்து தைவான் மாகாணத்தின் மீது அதன் கொலைபாதக ஆட்சியை புகழ்ந்து அழகுபடுத்துவதற்கு தன் ஞலியன்றதைச் செய்தான்.

சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பலுக்கும் சியாங் கை-ஷேக் கொள்ளைக் கோஷ்டிக்குமிடையிலுள்ள இந்த புதிய எதிர்ப்புரட்சி ஒத்துழைப்பு எந்த அர்த்தத்திலும் ஒரு தனிமைப்படுத்தப்பட்ட சம்பவமாக இருக்கவில்லை. நீண்டகாலமாக இந்த கும்பல் சியாங் கை-ஷேக் கொள்ளைக் கோஷ்டியுடன் கேவலமான தொடர்புகளை வைத்துக் கொண்டு ''இரு சீனுக்களை'' உருவாக்கும் அமெரிக்க ஏகாதிபத்திய சதிக்கு சுறுசுறுப்பாக சேவை செய்து வருகின்றது. 1963 ல், படுமோசமான ''ஒரு பகுதி அணுவாயுத தடை ஒப்பந்தத்தில்'' ஒரு ''சுயாதிபத்திய நாடாக'' சியாங் கை-ஷேக் கொள்ளைக் கோஷ்டியை கைச்சாத்திடுவதற்கு சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் வெட்கமில்லாமல் அனுமதித்தது. தங்களுடைய செய்திப் பத்திரிகைகளிலும் மாத வார ஏடுகளிலும்; சியாங் கை-ஷேக் கொள்ளைக் கோஷ்டி அடைபட்டுள்ள தைவான் மாகாணத்தை ஒரு ''தேசம்'' என்றும் சீன மக்களின் பகிரங்க எதிரியான சியாங் கை—ஷேக் ''ஜனுதிபதி'' என்றும் அவர்கள் மீண்டும் மீண்டும் அழைத்துள்ளார்கள். சியாங் கை-ஷேக் கொள்ளைக் கோஷ்டியின் கொடியை அநேக தடவைகளில் அவர்கள் தமது மாதாந்த வார வெளியீடுகளில் பிரசுரித்துள்ளார்கள். அநேக தடவைகள் சர்வ தேசிய மகாநாடுகளில் சியாங் கை-ஷேக் கொள்ளைக் கோஷ்டியின் ''பிரதிநிதிகளுடன்'' ஒரே ஆசனத்தில் அவர்கள் இருந்திருக்கின்ருர்கள். தற்பொழுது சியாங் கை-ஷேக் கொள்ளைக் கோஷ்டியுடன் ஒத்துழைப்பதற்கு தைவானிற்கு விக்டர் லூயிசை அனுப்பும் அளவு தூரத்திற்கு சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் சென்றுவிட்டது. சீனவிற்கெதிரான அதனுடைய பாதகமான நடவடிக்கைகளின் ஒரு புதிய சாட்சியமாக இது இருக்கின்றது.

சோவியத் திரிபுவாதிகளின் பாசிஸ ஆட்சிக்கெதிராக சோவியத் யூனியனில் மக்கள் போராட்டம் பலம்பெற்றுத் தீவிரமடைந்து வருகின்றது. சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் மேற்கொண்டு செல்வது மிகக் கடினம் என்பதைக் காண்கின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அது இருப்பதனுல்தான் சோவியத் திரிபுவாத சோஷல் ஏகாதிபத்தியம் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனும் சகல நாடுகளின் பிற்போக்காளர்களுடனும் ஒத்துழைப்பதன் மூலம் சீனவை எதிர்ப்பதற்கு சாத்தியமான ஒவ்வொரு வழியிலும் முயற்சிக்கின்றது. சியாங் கை-ஷேக் கொள்ளைக் கோஷ்டியின் நாற்றமடிக்கும் அரசியல் பிணத்தை பாவிக்குமளவிற்கு சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் மிக கீழான நிலைக்கு சீரழிந்துவிட்டது. உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் தொல்லைகளால் சூழப்பட்ட சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் ஒரு தப்பிச் செல்ல முடியாத இக்கட்டான நிலையில் இருந்துகொண்டு, ஒரு இறுதி மரணப் போராட்டத்தை வீணுக செய்கின்றது என்பதன் ஒரு அறிகுறியாக இது இருக்கின்றது.

ஆனுல், சீனவிற்கெதிரான, ஒரு எதிர்ப் புரட்சி ''புனித கூட்டுச் சேரலை'' உருவாக்குவதற்கு சோவியத் திரிபுவாதமும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் எந்தவித குப்பைகளை ஒன்று சேர்த்தாலும் பரவாயில்லை, அவர்கள் தவிர்க்க முடியாமல் ''ஒரு கல்லைத் தூக்கி தங்கள் காலில் போடுகின்ருர்கள்,'' அவர்களுடைய முயற்சிகளால் அவர்களுடைய சொந்த அழிவை தீவிரப்படுத்தத்தான் முடியும்.

## இலங்கையில் அந்நிய வர்த்தகர்களின் . . .

◎ 2-ம் பக்கத் தொடர்

களே. ஏகாதிபத்திய சார்பு யூ. என். பி. ஆட்சி தன்னுல் முடிந்த மட்டும் சகல வசதிகளையும் இந்தக் கொள்ளையர்களுக்கு செய்து கொடுப்பதோடு நைலோன், டெரிலின், டெட்ரின், ரேயன் துணிகளுக்கான மூலப் பொருட்களுக்கு வரிச் சலுகை அளித்துள்ளது. இதனுல் ஒருயார் துணி உற்பத்தி செலவு இரண்டு ரூபாய் ஐம்பது சதம் கூட இல்லை. எனினும் விற்பனைக்கு இத்துணிகள் வரும் போது ஒரு யார் துணியிலேயே 200, 300, 400 சத விகிதம் கூடுதல் விலை வைத்து கொள்ளையடிக்கப்படுகிறது.

ஒரு யார் இரண்டு ரூபாய் ஐம்பது சதம் பெறுமதியுள்ள துணிகள் 10/- 20/- 30/- 40/- 100/- 150/- ரூபாய்கள் வரை விலைவைத்து இந்த ஏகபோக அந்நிய முதலாளிகள் இலங்கை மக்களைச் சுரண்டுகின்றனர். தேர்தல் காலங்களில் யூ. என். பி. கட்சிக்கும் மற்றும் பிற்போக்கு கட்சிகளுக்கும் இந்த ஏகபோக முதலாளிகள் தாராளமாக பண உதவி செய்வதால் இவர்களைப் பகைத்துக் கொள்ள யூ. என். பி. ஆட்சியினரோ அல்லதுமற்றக் கட்சினரோ தயாரில்லை எனவே இது பற்றி வாய் திறமால் இருக்கின்றனர்.

மூன்று வருடங்களுக்கு முன் ஜவுளிகளின் விலை நிர்ணயிப்பு என்ற நாடகத்தை யூ. என். பி. ஆட்சி அரங்கேற்றியது. அந்த நாடகத்தின் திரை தூக்கப் பட்டதும் விற்பனையாகாது தேக்கி வைத்திருந்த தமது பழைய சரக்கையெல்லாம் விற்பனை செய்வதற்கு ஜவுளி முதலாளிகளுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. அத்தோடு, சிறிய ஜவுளி வர்த்தகர்களையெல்லாம் கடைகளை பூட்டச் செய்து பெரும் ஏகபோக அந்நிய ஜவுளி இறக்குமதி வர்த்தகர்களுக்கு பகல் கொள்ளையடிக்கவும் வாய்ப்பைத் தேடித் தந்தது.

மேலும், ரெடிமேட் உடுப்புகள் தயாரிக்கும் பெரிய நிறுவனங்கள் பெருமளவு சுரண்டல் நடத்துவது சகலரும் அறிந்ததே. பத்து ரூபாய் பெறுமதியுள்ள ஒரு சேட் 40/- ரூபாய்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக பாராளுமன்றத்தில் பலமுறை கேள்விகள் எழுப்பப்பட்டும் யூ. என். பி. ஆட்சியினரால் மழுப்பப்பட்டது.

யூ. என். பி. ஆட்சி அந்நிய முதலாளிகளுக்கு இந்த நாட்டை லாபம் தேடும் சுரண்டும் வேட்டைக்காடாக மாற்றியுள்ளது. ஏகாதிபத்திய சார்பு முதலாளித்துவ யூ.என். பி. ஆட்சியில் சுரண்டும் கொள்ளைக் கூட்டத்திற்கு சகல வாய்ப்பும் இருக்கத்தானே செய்யும். இத்தகைய சுரண்டலுக்கு முற்றுப் புள்ளி வைப்பதாயிருந்தால் சுரண்டும் வர்க்கத்தின் கையிலிருக்கும் ஆட்சி அதிகாரம் வெகுஜனங்களின் கைக்கு மாற வேண்டும்.

குட்டிக் கதை

## நியதி

யோ. பெ.

ஒரு பெரிய நகரத்தில் உள்ள ஒரு பெரிய முதலாளி நோய் பிடித்து படுக்கையில் விழுந்துவிட்டார். அவர் வயிறு ஊதிப் பெருத்திருந்தது. அவருடைய நோய் என்னவென்றும், அதற்கு மருந்து என்னவென்றும் அவருடைய வைத்திய நிபுணர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

கடைசியில் ஒரு பெரிய நிபுணர்; அறிஞர் அழைக்கப்பட்டார். அவர் முதலாளியை பரிசோதித்தார்.

''நீங்கள் ஒரு முதலாளியா?''

''ஆம் நான் ஒரு பெரிய முதலாளி''
என்று கூறி அவர் பெருமைப்பட்டார்.

நிபுணர் சிரித்தார்.

''உங்கள் முதலாளித்துவ சமுதாயத்தில் உங்களுக்கு வர வேண்டிய நோய்தான்.''

''ஐயோ!'' என்று முதலாளி பயந்து கத்தினுர்.

''பயப்படாதீர்கள் உங்களுக்கு மட்டுமல்ல; முதலாளித்துவத்திற்கே இந்த நோய்தான் பிடித்திருக்கிறது. முற்றியும் விட்டது.''

''இதற்குக் காரணம் என்ன?'' என்று முதலாளி நிபுணரைக் கேட்டார். நிபுணர் சொன்னுர்:

''காலம் காலமாக நீதியாக உழைக்கும் தொழிலாளி வர்க்கத்தை கசக்கிப் பிழிந்து, அவர்களின் இரத்தத்தைக் குடித்த காரணத்தால், அது உடலில் மிதமிஞ்சி விட்டது.''

முதலாளிக்கு கிலி பிடித்துக் கொண்டது.

''இந்த நோய்க்கு என்ன பெயர் ஐயா.''

''இது சுரண்டல் நோய்! தொழிலாளர்களின் உழைப்பை இரத்தம் இரத்தமாகச் சுரண்டியதனுல் வந்த நோய்!''

நிபுணர் சிரித்தார், முதலாளி நடுங்கினுர்.

''அது உண்மை தான் ஐயா; நான் இந்த நோயில் இருந்து தப்பமுடியாதா? அதற்கு ஒரு வழி சொல்லுங்கள்'' என்று கேட்டார்.

'பயப்படாதீர்; நீர் இப்பொழுது சாகமாட்டீர்; இந் நோய் தானுகவும் சாகாது!'' என்று கூறிக்கொண்டு வைத்திய நிபுணர் எழுந்தார்.

''ஐயா இந்த நோய் தீர வழிசொல்லுங்கள்!''

''வழியா! இருக்கிறது. உங்களால் சுரண்டப்பட்ட தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து எழுந்து வந்து அடித்துக் கொன்ருல்தான் இந்த நோயும், இதே நோய் பிடித்த முதலாளித்துவ சமுதாயமும் அழியும். அத்தோடு நீரும் அழிந்து விடுவீர்.''

நிபுணர் கூறியதைக் கேட்டு கிலியடைந்த முதலாளி,
''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''உண்மை! உண்மை!''

முதலாளிக்கு உண்மை விளங்கியது அவர் ஊதிய வயிற்றைப் பிடித்துக் கொண்டு,

''இராணுவம்! பொலிஸ்! என்று குளறினுர்.''

நிபுணர் சிரித்துக் கொண்டு நடந்தார்.

''நீர் அவற்றை உமது நோயைப் பாதுகாக்கவா அழைக்கிறீர். அதில் வேலையில்லை. தொழிலாளர்கள் ஆயுதம் ஏந்தி வருவார்கள். நோயும் நீங்களும், உங்கள் சமுதாயமும் அழிந்து விடும். அதுதான் நியதி!''

நிபுணர் சென்று விட்டார். முதலாளி நடுநடுங்கிக் கொண்டிருந்தார்.

## முஸ்லிம் லீக் மாநாடு

# முஸ்லிம் லீக் யூ. என். பி. யின் கிளை

**பொதுத் தேர்தல் நெருங்குகிறது என்றதும் உறங்கிக் கொண்டிருந்த கட்சிகளெல்லாம் துயில் நீங்கி சுறு சுறுப்புடன் வருடாந்தப் பொதுக் கூட்டங்களும், மாநாடுகளும் நடத்தத் தொடங்கியுள்ளன. அண்மையில் யு. என். பி. குளியாப்பிட்டியில் ''மாநாடு'' என்ற பெயரில் ஒரு பொதுக் கூட்டத்தை நடத்தியது. அந்தக் கூட்டத்தில்தான் பிரதமர் டட்லி பொதுத் தேர்தல் எந்த நேரத்திலும் வரலாம் என்றார்.**

அரசாங்கத்தில் ஓர் அங்கமாக இருந்து கொண்டு அதே சமயம் விலகல் நாடகம் நடத்திக் கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சி ஏப்ரலில் மாநாடு நடத்தப் போகிறது. யு. என்.

## முஸ்லிம் முதலாளித்துவ தலைவர்களால் பாட்டாளி வர்க்க முஸ்லிம் மக்களை ஏமாற்ற முடியாது

பிக்கு சலாம் போடும் முஸ்லிம் லீக்கும் சில நாட்களுக்கு முன் தனது வருடாந்தப் பொதுக் கூட்டத்தை நடத்தி முடித்து விட்டு, ஏப்ரல் 4ந் தேதி மாவனல்லையில் மாநாடும் நடத்தப் போகிறது. இந்த மாநாட்டில் பங்கு பற்றும் படி இந் நாட்டிலுள்ள சகல முஸ்லிம் ஸ்தாபனங்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார் முஸ்லிம் லீக்கின் தலைவர் டாக்டர் கலீல். இந்த மாநாட்டில் பிரதமர் டட்லி பிரதம பேச்சாளராகக் கலந்து கொள்கிறார். இந்த மாநாட்டின் முக்கிய நோக்கம் அடுத்து வரும் பொதுத் தேர்தலில் இலங்கை முஸ்லிம்களின் வாக்குகளை யு. என். பி.க்குப் பெற்றுக் கொடுக்கத் தயார் செய்வதாகும்.

டாக்டர் கலீல் தலைமை தாங்கும் அகில இலங்கை முஸ்லிம் லீக் இந் நாட்டு முஸ்லிம்களின் தனிப்பட்ட ஸ்தாபனம் என்றும், அவர்களின் நலன்களைக் கட்டிக்காக்கும் ஸ்தாபனமென்றும் என்ன தான் மாய்மாலம் பண்ணினாலும் உண்மையில் அது யு. என். பி.யின் ஒரு கிளை தான் என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இன்று முஸ்லிம் லீக்கின் தலைவர்களாக உள்ளவர்களும் முக்கிய நபர்களும் யு. என். பி.யின் பிரதான தூண்களில் ஒரு பகுதி என்பதிலிருந்து இது தெளிவாகும்.

டட்லியாரின் தந்தையான செத்துப்போன டி. எஸ். சேனநாயக்கா காலத்திலேயே இந்த முஸ்லிம் லீக் யு. என். பி.யுடன் இணைந்து விட்டது. அன்று தொட்டு இன்று வரை இந்த ஸ்தாபனம் யு. என். பி. யின் கிளையாகவே இருந்து வருகிறது. கடந்த கால யு. என். பி. அரசாங்கங்களில் லீக்கின் தலைவர்களில் ஒருவரான காலஞ் சென்ற டி. பி. ஜாயாவும், இப்போதைய தலைவரான டாக்டர் கலீலும் அமைச்சர்களாய் இருந்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

### சுரண்டுபவர்களின் ஸ்தாபனம்

யு. என். பி.யின் கிளையான இந்த லீக் இலங்கையிலுள்ள முஸ்லிம்களின் ஸ்தாபனம் என்று கூறிக் கொண்டாலும், உண்மையில் இந்த ஸ்தாபனம் இலங்கை முஸ்லிம்களிடையே உள்ள பெரு முதலாளிகள், பெரும் வர்த்தகர்கள், பெரும் தனவந்தர்கள், தோட்டங்கள், பெரும் பெரும் கட்டடங்கள், காணிகள் ஆகியவற்றின் சொந்தக் காரர்கள் ஆகியோரின் ஸ்தாபனமே ஆகும். இவர்கள் சுரண்டும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். அதனால் தான் இவர்கள் தமது ஸ்தாபனம் தோன்றிய காலத்திலிருந்து, இது வரை யு. என். பி.க்கு வர்க்க ரீதியாக ஒத்துழைப்புக் கொடுத்து, அதனை ஆதரித்து, அதன் கிளை போல் இயங்கி வருகின்றனர். ஒவ்வொரு தேர்தலிலும் முஸ்லிம்களின் மீது தமக்குள்ள தவறான செல்வாக்கைப் பயன் படுத்தி பாமர முஸ்லிம்களை ஏமாற்றி யு.என். பி.க்கு ஆதரவாக வோட்டுப் பொறுக்கும் வேலையைச் செய்து வருகின்றனர். தமிழ் மக்களின் பேரைச் சொல்லிக் கொண்டு தமிழரசு-தமிழ் காங்கிரஸ் தலைவர்கள் எப்படி தமது வர்க்க நலன் காக்கின்றனரோ அதே போன்று தான் இந்த முஸ்லிம் லீக்கின் தலைவர்களும் முஸ்லிம்களின் பெயரைச் சொல்லிக் கொண்டு யூ. என். பி. யுடன் சேர்ந்து அரசாங்கத்தில் பங்கெடுத்து, பதவி பெற்று தமது வர்க்க நலன்களைக் கட்டிக் காத்து வருகின்றனர். இதைத் தவிர, இவர்களோ, இவர்களின் ஸ்தாபனமான லீக்கோ, ஏழைப் பாமர முஸ்லிம்களுக்கு இது வரை எதனையும் சாதித்துவிடவில்லை.

இந்த நாட்டிலுள்ள ஏறத்தாழ ஏழு லட்சம் முஸ்லிம்களில் பெரும்பாலோர் வறியவர்கள், உழைப்பாளிகள். வெகுஜனங்களில் ஒரு பகுதியினர். ஆனால் இவர்கள் அரசியல் விழிப்பில்லாத பாமரர்கள். ஆதலால், முஸ்லிம் என்றும் மதம் என்றும் சொல்லி ஏமாற்றி தமது சொந்த நலன் காக்க இந்த லீக் தலைவர்களால் முடிகிறது.

ஏனைய சமூகத்தைச் சேர்ந்த விவசாயிகள், தொழிலாளிகள், உழைக்கும் இதர மக்கள் எப்படி அந்நிய ஏகாதிபத்தியத்தாலும், அவர்களின் உள்ளூர் ஏஜெண்டுகளான இந்த நாட்டு பிற்போக்கு முதலாளித்துவக் கும்பலாலும் சுரண்டப் படுவதைப் போலவே முஸ்லிம் தொழிலாளர்களும், விவசாயிகளும், இதர முஸ்லிம் உழைப்பாளர்களும் ஏழைகளும் சுரண்டப் படுகிறார்கள். மிகவும் வறிய நிலையில் துன்புற்று கஷ்ட ஜீவனம் நடத்துகிறார்கள். நாடெங்கும் பரந்து வாழுகின்ற முஸ்லிம்களின் வாழ்க்கையை அவர்கள் வாழும் பகுதிகளில் சென்று பார்த்தால் இந்த உண்மை தெரியும். இதுகாலவரை இந்த சுரண்டப் படும்—ஏழை பாமர முஸ்லிம்களைப் பற்றி இந்த பெரும் முஸ்லிம் தலைவர்கள் ஒரு மூச்சும் விடவில்லை; விடவும் மாட்டார்கள். பெரும் பங்களாக்களில் சகல விதமான சௌகரியங்களுடன் கொழும்பிலும், இதர நகர்ப் புறங்களிலும் சுக போக வாழ்க்கை நடத்தும் இவர்கள் நாட்டுப் புறங்களில் குடிசைகளிலும், கொட்டில்களிலும் வாழும் முஸ்லிம்களைப் பற்றி ஒன்றும் தெரியாது. அதனைக் குறித்து அக்கறைப்படுவதுமில்லை. முஸ்லிம் சகோதரத்துவதைப் பற்றி மேடைகளிலும், பத்திரிகைகளிலும் அளக்கும் இத் தலைவர்கள் தமக்கும் ஏழை முஸ்லிம்களுக்கும் இடையே ஏன் சகோதரத்துவம் இல்லை என்பதை விளக்குவார்களா?

### ஏமாற்று பலிக்காது

ஆனால் இத்தலைவர்களின் ஏமாற்று வித்தைகள் இனி முஸ்லிம் பாட்டாளி மக்களிடையே செல்லாது. சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகியோரின் மத்தியில் உள்ள முதலாளிகளும் பிற்போக்கு வாதிகளும் ஒரே வர்க்கத்தினர்-சுரண்டும் வர்க்கத்தினர். அதே போல இந்த இனத்தவர்களிடையே சுரண்டப்படும் மக்களும் ஒரே வர்க்கத்தினர். முஸ்லிம் முதலாளிகள் சிங்கள தமிழ் முதலாளிகளுடன் வர்க்க அடிப்படையில் ஒன்று சேர்வது போல முஸ்லிம் பாட்டாளி மக்களும் சிங்கள, தமிழ் பாட்டாளி மக்களுடன் வர்க்க ரீதியுல் ஒன்றுபட வேண்டும்-இவர்களின் நலன்கள் ஒன்று பட்டவை. ஆதலால் ஒன்று படவே செய்வார்கள். இந்த வர்க்க உணர்வும், அரசியல் உணர்வும் ஏற்படும்போது, இனத்தையும், மொழியையும், மதத்தையும் கூறி இப் பாட்டாளி வர்க்கத்தினரை—உழைக்கும் வெகுஜனங்களை வகுப்புவாத ரீதியில் பிளவு படுத்தி தமது அரசியல், வர்க்க

மியாத்

லாபங்களைத் தேடிக் கொள்ளும் முதலாளித்துவ முதலைகளின் ஏமாற்று வித்தைகள் பலிக்காது.

இந்த நாட்டிலுள்ள பெரும்பாலான உழைக்கும் முஸ்லிம் பாட்டாளி மக்களும் வெகுஜனங்களும், யு. என். பி. யின் கிளையான முஸ்லிம் லீக் கிளையோ, அதன் தலைவர்களையோ நம்பி ஏமாந்த நிலை மாறி வருகிறது. ஆதலால் அடுத்து வரும் தேர்தலுக்கு யு. என். பி. க்கு ஆதரவு திரட்டும் லீக் மாநாட்டின் நோக்கமும் நினைக்கும் அளவுக்கு நிறைவேறாது.


வாசியுங்கள்

தொழிலாளி

விலை சதம் 10

விபரங்களுக்கு:-

121. யூனியன் பிளேஸ்
கொழும்பு-2


## வேண்டாம் வேண்டாம் "சியவச"

— பாலகிரி —

சீ! யார் வச(ம்) இந்த ஒரு லட்சம்; இச்
சிறந்த தந்திர வுலகினிலே! என்று
''சியவச'' இன்று சிரிக்கின்றதே; ஐயோ
சீர் கெட்ட செயலேன் வேண்டாமே!
பேயர்கள் சொன்னார் பெரும் லாபம்; இதைப்
பெருமையோடு வரவேற்றிடவே
நீ யார் இதனை வாழ்த்தி நின்றால்; எங்கள்
திறமைகள் வீணாக விட மாட்டோம்!

சீரிய இலங்கையின் ''கல்வி நிதி'' இன்று
சீர் குலைந்து விட்டதோ ஐயா; உயர்
ஈரிய கொலையார் இதனால் தானே
ஈழ மதில் இதை நிறைத்து விட்டார்; இங்கு
தேறிய பெரியோர் சொன்னாரே இது
தேவை மிக்க வொரு சேவையென்றே; எனின்
நாறிய வறுமையில் நமக்கிதைத் தந்தால்
நாய்களோ! அன்றி நாம் மனிதர்களோ!

பாடப் புத்தகம் வாங்கிட வேண்டிப்
பல நாள் வீட்டில் போராட்டம்; மனம்
வாடப் பள்ளியை நோக்கியே சென்றால்
வாத்தியார் தருவார் சியவச; அங்கு
பாடம் பயில்வது பகுத்தறிவா அன்றி
பணங் கொடுத்தாடு(ம்) சூதாட்டமா?; கல்விக்
கூட(ம்) தான் அதன் குறிப்பிடமா! இக்
கொடுமைக(ள்) ஏனோ மாணவர்க்கு!

வேண்டாம் வேண்டாம் சியவச; இந்த
வேலையற்ற விசர் வேலையும் வேண்டாம்
தொண்டாம் பணியா(ம்) இது இங்கே; இல்லை
தொல்லையல்லவோ மாந்தருக்கு இதைக்
கொண்டால் வாழ்வில் பெரும் லாப(ம்) தனைக்
கொள் வோ(ம்) என்றே எண்ணாமல்; இங்கு
வேண்டாம் வேண்டாம் ''சியவச''; இந்த
வேலையற்ற விசர் வேலையும் வேண்டாம்!

# மக்களை வாட்டும் வரட்சிக்கு காரணமென்ன?

◎ 1-ம் பக்கத் தொடர்ச்சி

...ப்பு பிரச்சனையை நாம் தீர்க்க முடியும். இந் நாட்டிலுள்ள ஆறுகள் தோண்டப்பட்டு ஆழமாக்கப்படல் வேண்டும். இதனுல் ஆறுகள் கூடுதலான நீரைத் தேக்கிக் கொள்ள அவற்றினுல் முடியும். வெள்ளப் பெருக்கினுல் ஏற்படும் நஷ்டங்களைத் தடுக்க முடியும். நீரை தேக்கி வைப்பதற்கும், நீர் வீழ்ச்சிகளிலிருந்து மின்சாரத்தைப் பெறுவதற்கும் ஆறு உற்பத்தியிடங்களில் அணைகள் கட்டப்பட வேண்டும்.

இதைச் செய்ய வேண்டுமேயானுல், பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் சொத்துக்களில் நாம் கைவைத்தாக வேண்டும். கடந்த நூற்றுண்டுகளாக நம்மைச் சுரண்டி அவர்களைக் கொழுக்க வைத்த அவர்களது வளமிக்க தேயிலைத் தோட்டங்களில் நாம் கைவைத்தேயாக வேண்டும். பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் நலன்களைத் தாக்கக்கூடிய தைரியமுள்ள ஒரு அரசாங்கம் இந்நாட்டில் ஏற்படவேண்டும். யு. என். பி. அரசாங்கத்திற்கும், சுதந்திரக் கட்சி அரசாங்கத்திற்கும் அத்தகைய துணிவில்லை. 1956ம் ஆண்டில் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் மக்கள் ஐக்கிய முன்னணி விடுத்த தேர்தல் பிரகடனத்தில் வெளியாறுக்குச் சொந்தமான சகல தோட்டங்களையும் தேசிய மயமாக்கும் உறுதிமொழி காணப்பட்டது. ஆனுல், அவர் பதவிக்கு வந்தவுடன், இன்னும் பத்து வருடங்களுக்கு அதனைத் தான் தள்ளிப்போட்டுள்ளதாக அறிவித்தார். அவரின் விதவை தலைமை தாங்கும் முக்கூட்டு முன்னணியினரின் பொது வேலைத் திட்டத்தில் இதைப் பற்றி ஒரு குறிப்புக்கூட இடம் பெறவில்லை.

எமக்குத் தேவையான அரிசியை, மின்சாரத்தை உற்பத்தி செய்ய நாம் தவறியதற்கு மூல காரணமாயுள்ள நீர்ப்பாசன, தண்ணீர் இல்லாமை ஆகிய பிரச்சினைகள் தீர, பிரித்தானிய ஏகாதிபத்தியத்தையும் அதன் அடிவருடிகளையும் இந் நாட்டிலிருந்து துடைத்து எறிவதற்கு தொழிலாளர்கள், விவசாயிகள், புரட்சிகர புத்திஜீவிகள், இந் நாட்டிலுள்ள சகல தேசபக்த சக்திகள் ஆகியோரைக் கொண்ட புரட்சிகர ஐக்கிய முன்னணியைக் கட்டி எழுப்பாமல் என்றுமே தீர்த்துக் கொள்ள முடியாது.

## புத்துவெட்டுவான் விவசாயிகள் இயக்கம்

# கோரிக்கைகள் தீர்க்கப்படாவிட்டால் போராட்டத்தில் இறங்க முடிவு

அகில இலங்கை விவசாயிகள் சம்மேளன புத்துவெட்டுவான் - மருதங்குளம்-பழைய முறுகண்டி கிளை அண்மையில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரைச் சந்தித்து தமது பிரச்சினைகள் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்தியது.

13 வருடங்களாகியும் புத்துவெட்டுவான் - மருதங்குளம், பழைய முறுகண்டி குடியேற்றத் திட்டங்களிலுள்ள மக்களுக்கு அரசாங்கம் எந்தவிதமான வசதிகளையும் செய்து கொடுக்கவில்லை. அப்பகுதியிலுள்ள விவசாயிகள் பல தடவைகள் அரசாங்கத்துக்கும், பாராளுமன்ற அரசியல்வாதிகளுக்கும் எத்தனையோ கோரிக்கைகள்விட்டும் அவர்கள் 'செவிடன் காதில் ஊதிய சங்கு போல' செவிமடுக்காதிருந்தனர். விவசாயிகள் ஐக்கியப்பட்டு போராடுவதன் மூலமே உரிமைகளைப் பெற முடியும் என்பதை உணர்ந்து, விவசாயிகளின் போராட்ட ஸ்தாபனமான அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தில் அண்மையில் இணைந்தனர்.

இருநூற்றுக்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள், வாலிபர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில், போராட்டத்தில் முதல் படியாக தமது பிரச்சினைகள் சம்பந்தமாக யாழ். அரசாங்க அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்துவதென்றும் அது பயனளிக்காத கட்டத்தில் நேரடி நடவடிக்கையில் இறங்குவதென்றும் தீர்மானித்தனர். அதன்படி அண்மையில் மேலதிக அரசாங்க அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்தினர். தண்ணீர்ப் பிரச்சினை, ரோட்டுப் பிரச்சினை உட்பட விவசாயிகளின் கோரிக்கைகளை அரசாங்க அதிபர் ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்ததுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுப்பதாக மேலதிக அரசாங்க அதிபர் உறுதியளித்தார்.

தமது கோரிக்கைகளை உடனடியாகத் தீர்த்து வைக்கத் தவறினுல், நேரடிப் போராட்டத்தில் இறங்கப் போவதாக விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ளது. கிளிநொச்சியிலுள்ள காணிக் கந்தோரில் நடைபெற்ற இப் பேச்சுவார்த்தையில் சங்கத் தலைவர் திரு. எம். இராமலிங்கம் அவர்களும் அகில இலங்கை விவசாயிகள் சம்மேள கிளிநொச்சிப் பிரதேசச் செயலாளர் தோழர் நா. யோகேந்திரநாதனும் கலந்து கொண்டனர்.

## திருகோணமலை மீன் பிடித் தொழிலாளர்கள்

இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த திருகோணமலை மாவட்டத் தொழிலாளர்கள் இலங்கை பொது, கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தில் (சி. டி. யூ. எப்.) திரண்டுள்ளனர். இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம் சங்கத்தை அங்கீகரித்துள்ளது.

**எமது சகோதரப் பத்திரிகையான 'கம்கருவா' வுக்கு வந்த சிங்களக் கடிதத்தின் தமிழாக்கத்தை இங்கு பிரசுரிக்கின்ரேம்.**

# சாதிக் கொடுமைகள் ஒழியட்டும்

இலங்கையின் வட பகுதியில் வாழும் தாழ்த்தப்பட்டவர்களென சொல்லப்படும் மக்களின் மனித உரிமைகளையும், ஆலய வழிபாட்டுரிமையையும் அளிக்காமல் அவர்களை கொடுமைப்படுத்தி அடக்கி-ஒடுக்கிக் கொண்டிருக்கிருர்கள் உயர்சாதி எனச் சொல்லப்படுபவர்கள். நாட்டில் இத்தகைய அநியாயங்கள் - அட்டூழியங்கள் நடப்பதை அனுமதிக்க முடியுமா?

இந் நாட்டின் ஒரு பகுதியினரான தமிழ் மக்களில் ஒரு சாரார்ரை வடபகுதியில் தாழ்த்தப்பட்டவர்களெனக் கூறி செய்யும் கொடுமைகள் அனந்தம். அவர்களுக்கு தமது உடலை மறைக்க உடையணிய முடியாது; தமது குழந்தைகளுக்கு நல்ல கல்வி போதிக்க பொதுப் பாடசாலைகளுக்கு அனுப்ப முடியாது; கடைகளில் தேனீர் அருந்துவதற்குக் கூட தனியாக வேறு பாத்திரம் கொடுக்கப்படுகிறது; பொதுக் கிணற்றில் குடி தண்ணீர் அள்ள முடியாது; ஆசனங்களில் உட்கார முடியாது; இவைகளைப் பார்க்கும் போது இந் நாட்டில் இரண்டு அரசாங்கங்கள் இருக்கின்றதோ என்ற பிரச்சினை எழுகிறது. நாகரீகமுள்ள மக்கள் இதை அனுமதிக்க முடியுமா? சமத்துவத்தையும், வழிபாட்டு சுதந்திரத்தையும் கௌரவிக்கும் எவரும் இக் கொடுமைகளை அனுமதிக்க முடியுமா? அதனுல், தாழ்த்தப்பட்ட மக்கள் எனப்படுவோரின் விடுதலைக்காக நடைபெறும் போராட்டத்திற்கு இந் நாட்டின் மக்கள் அனைவருமே பூரணமாக ஆதரவு கொடுத்தாக வேண்டும்,

இன்றுள்ள இத்தகைய நிலையை ஒழிப்பதற்கு இலங்கை முழுவதும் பெரும் இயக்கங்கள் நடத்தப்பட வேண்டும். தெற்கிலோ - வடக்கிலோ, உயிர் சாதியினராயினும்-- அதிகார பலமுள்ளவர்களாயினும் எங்கு, யாரால் கொடுமைகள் நிகழ்ந்தாலும் அதை நாம் வன்மையாகக் கண்டித்து எமது எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வடக்கேயுள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் மனித உரிமைகளையும், மத சுதந்திரத்தையும் அங்கீகரியுங்கள் என வடக்கிலுள்ள உயர்சாதியினருக்கு நாம் அழுத்தமாகக் கூறுகின்ரேம்.

இவ்வண்ணம்
**திலக் நிகரெபொல**
(பொதுச் செயலாளர்)
தெமடகொட பௌத்த வாலிபர் சங்கம்

521, தெமடகொட ரோட்,
கொழும்பு -9

## இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் விடுத்த அறிக்கை

# முக்கூட்டு முன்னணியினர் இவற்றுக்கு பதில் தர முடியுமா?

1. ஏப்ரல் முதலாம் திகதி வேலை நிறுத்தம் செய்யாமல் ஊர்வலம் மட்டும் நடத்துவது ஏன்?

   உங்களுடைய தலைவர்களுக்கு பங்குகள் இருக்கும் கம்பெனிகளுக்கு நஷ்டம் ஏற்படும் என்பதாலா?

2. "எந்த அறிவுள்ளவனும் இந்தக் கோரிக்கையைத் தரமாட்டான்" எனக் கைத்தொழில் நீதிமன்றத்தில் சமசமாஜ தொழிலாளர் சம்மேளனத்தின் சார்பில் வழக்கறிஞர் லியனகே கூறவில்லையா?

3. "இலங்கை தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் என். எம். பெரேரா 1964 ல் நிதி மந்திரியாக இருந்த போது சமர்ப்பித்த வரவு - செலவு திட்டப் பிரசங்கத்தின் போது நாட்டின் பொருளார நிலை மோசமடைந்திருப்பதால் தொழிலாளர்களின் கோரிக்கைகளைத் தர முடியாது எனக் கூறியதாக சமசமாஜ தொழிற் சங்கத்தின் சார்பில் கைத்தொழில் நீதி மன்றத்தில் சாட்சியம் அளித்த ஒஸ்வின் பெர்ஞந்து கூறியதை மறுக்க முடியுமா?

4. ஸ்ரீ லங்கா தொழிற் சங்கத்தின் சார்பில் கைத்தொழில் நீதிமன்றத்தில் கடைசியாகப் பேசிய ஸ்ரீ லங்கா தொழிற் சங்கத்தின் செயலாளர் ஒரு கம்பெனியின் டிரக்டர் அல்லவா?

**இதற்கு மேலும் அவர்களின் மீது நம்பிக்கை இருக்கிறதா?**

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஐயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: ''தொழிலாளி'' அச்சகம், 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2